வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | Reg. No. : P . 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 06.03.2024 புதன்கிழமை | இதழ் : 66 | பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை




# இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னைக்கு பேச்சு வழியில் தீர்வு

## இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

இந்திய, இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்னை என்பது பல தசாப்தங்களாக காணப்படும் பிரச்னையாகும். இதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான பேச்சுகள் மூலமே தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும் - இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன் -

இந்த மாத இறுதிக்குள் காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறினார்.

இலங்கை பத்திரிகை கழகம் நேற்று நடத்திய கேள்வி - பதில் நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்தியாவைப் பொறுத்த வரையில் நகரம் மற்றும் கிராமங்களில்

11

திருச்சி சிறப்புமுகாமில் உள்ள

# மூவரின் உயிர்களையும் காப்பாற்ற முன்வாருங்கள்

## தமிழக சட்டத்தரணி அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 06

திருச்சி சிறப்பு முகாமில் இருக்கும் முருகன், றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரை உடன் மீட்க வேண்டும். அதற்கு இலங்கையில் இருக்கக்கூடிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி எடுக்க வேண்டும் - என்று தமிழ்நாட்டின் சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம் என்பது சிறையைவிட மிகவும் கொடூரமானது - என்றும் அவர் கூறியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சில நாட்களுக்கு முன்னர் காலமான சாந்தனுக்காக நீதிமன்றங்களில் வழக்காடிய சட்டத்தரணி புகழேந்தி நேற்று செவ் வாய்க்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே

11

# இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துக

## யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 06

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாண கடற்றொழிலாளர்

11




# பேஸ்புக் முடங்கியது

நியூயோர்க், மார்ச் 06

உலகம் முழுவதும் சமூக வலைதளங்களான பேஸ்புக், இன்ஸ்ட்ராகிராம் போன்றவை நேற்றிரவு முடங்கின.

பேஸ்புக், மெசேஞ்சர்,

11

# தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் மின்சார பேருந்து அறிமுகம்!

கொழும்பு, மார்ச் 06

நவீன வசதிகளுடன்கூடிய 200 மின்சார பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதில், 50 மின்சார பேருந்துகள் தமிழ் - சிங்கள புதுவருடத்துக்கு முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தனியாராலும் இலங்கை போக்குவரத்து சபையாலும் இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பேருந்துகளிலும் சி. சி. ரீ. வி. கமெராக்கள் பொருத்துவது கட்டாயமாக்கப்படும்.

இலங்கை போக்குவரத்து சபையும் புகையிரதத் திணைக்களமும் இணைந்து 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்துவதாக இருந்த இலத்திரனியல் ரிக்கெற் முறைமை அடுத்த 6 மாதங்களுக்குள் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# யார் ஜனாதிபதி ஆவதென்றாலும் எமது கட்சியின் ஆதரவே தேவை!

## அமெரிக்காவிலிருந்து திரும்பிய பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வேண்டும். எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் நடந்தாலும் நான் அதற்குரிய ஏற்பாடுகளை செய்வேன். எவர் ஜனாதிபதியாக இருந்தாலும் எமது கட்சியின் ஆதரவுடன்தான் வரமுடியும் - இவ்வாறு கூறியுள்ளார் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ.

பாராளுமன்றத்துக்கு மீண்டும் செல்லும்

11

# மீள் மின் இணைப்பு கட்டணமும் குறைப்பு

கொழும்பு, மார்ச் 06

துண்டிக்கப்பட்ட மின் இணைப்பைமீள வழங்குவதற்கான கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தூண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீளப்பெறுவதற்காக முன்னர் 3 ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டது. இது 800 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், மின் இணைப்பு சீரமைப்பின்போது செலுத்த முடியாத தொகையை தவணை முறையில் செலுத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க தெரிவித்தார். (ஐ)



# பல்கலை மாணவர்கள் பொலிஸாருடன் மோதல்

கொழும்பு, மார்ச் 06

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தைக் கலைக்க பொலிஸார் நேற்று நீர்த் தாரை மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். இதைத் தொடர்ந்து மாணவர்கள் - பொலிஸார் மோதலால் கொழும்பு பல்கலைக்கழக சூழலில் பதற்றம் நிலவியது.

பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பு பல்கலைக்கழகம் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை போராட்டம் இடம்பெற்றது.

இலவச கல்வி - இலவச சுகாதாரம் உள்ளிட்ட பொது மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டித்து இந்த போராட்டம் நடந்தது.

பேராதனை பல்கலைக்கழக மாணவர்களுடன் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் இதில் இணைந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார்

11

# மாலைதீவு சீனாவுடன் இராணுவ உடன்படிக்கை

மாலே, மார்ச் 06

மாலைதீவு நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டு இராணுவ ஒப்பந்தங்களில் சீனாவுடன் கைச்சாத்திட்டுள்ளது.

இதனிடையே, தீவுகளில் நிலைகொண்டுள்ள இந்திய படைகள் வரும் மே 10ஆம் திகதிக்குள் வெளியேற வேண்டும் என்ற காலக்கெடுவை ஜனாதிபதி மொஹமட் முய்சு நேற்று நினைவூட்டினார்.

இதன்போது “மே 10 ஆம் திகதி நாட்டில்

11

# விமானப் படையின் கண்காட்சி இன்று முற்றவெளியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 06

இலங்கை விமானப் படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இன்று புதன்கிழமை ‘வான் சாகசம் - 2024’ கண்காட்சி நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதிவரை முற்பகல் 10 மணி முதல் இரவு 11 மணி வரை நடைபெறவுள்ளது.

‘நட்பின் சிறகுகள்’ எனும் தொனிப்பொருளில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில், ஆளில்லா விமானங்கள், விமானப் படையின் தளபாடங்கள்,

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

ஈழத்தமிழர் பிரச்னையை தமிழகத்தில் உள்ள தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மாத்திரமன்றி, ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள் கூட எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றனர் என்பதில் இந்த ஊர்க்குருவிக்கு இருந்த சந்தேகத்தை ஏற்கனவே ஒரு தடவை எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஒரு தடவை இந்த ஊர்க்குருவி தமிழகத்துக்குச் சென்றிருந்தபோது நண்பர் ஒருவருடன் பாண்டிச்சேரிக்கு செல்ல முடிந்தது.

அங்கே நின்ற இரண்டு தினங்களில் ஒருநாள் அங்கு நடந்த ஒரு பொதுநிகழ்வுக்கு நண்பர் அழைத்துச் சென்றிருந்தார். அந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தவர்கள் இந்த ஊர்க்குருவியையும் அந்த விழாவில் ஒரு சிற்றுரை ஆற்றுமாறு கேட்டுக்கொண்டபோது அதனைத் தவிர்க்க முடியவில்லை.

அப்போது, அந்த இரண்டு நாட்களும் பாண்டிச்சேரியில் கண்டு ரசித்த பல விடயங்களையும் கூறிவிட்டு, ஈழத்தமிழர்கள் படும் துயரத்தையும் பதிவு செய்யத் தவறவில்லை.

பேசி முடித்துவிட்டு இருக்கையில் வந்து அமர்ந்தபோது, அருகில் இருந்த ஒரு பாண்டிச்சேரி அன்பர் கேட்டார், 'சார்... நீங்கள் இப்போது பேசியதுதான் சிங்களமா?' என்று.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. நான் பேசியது தமிழ் என்பது அவருக்கு புரியவில்லையா? அல்லது எனது தமிழ் அவருக்குப் புரியாததால் அதுதான் சிங்களம் என்று நினைத்துவிட்டாரா என்பது அப்போதும் எனக்குப் புரியவில்லை.

இதேபோலத்தான் நமது பிரச்னைகளையும் இங்குள்ள அரசியலையும் அறிந்து வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட சாந்தனின் விடுதலைக்காகத் தொடர்ந்து நீதிமன்றங்களில் வழக்காடியவர் வழக்கறிஞர் புகழேந்தி.

தமிழீழ உணர்வாளரான அவர், சாந்தனின் வழக்கில் மாத்திரமல்ல, அதுபோல பல ஈழத்தமிழர்களின் வழக்குகளில் முன்னிலையாகி அவர்களுக்கு உதவி வருபவர்.

சாந்தனின் உடலத்துடன் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றியபோது விடுத்த அழைப்பைக் கேட்டபோது, ஈழத்தமிழர்களுடன் இவ்வளவு நெருக்கமாக இருக்கின்ற அவருக்கே இந்த விடயம் இன்னும் புரியவில்லையா? அல்லது தெரிந்துகொண்டே இடம் ஏவல் அறிந்து எதையாவது பேச வேண்டும் என்பதற்காக அப்படிப் பேசினாரா என்பது தெரியவில்லை.

'தமிழ்நாட்டில் வாழும் ஈழத்தமிழ் அகதிகள் பெரும் துன்பங்களுக்குள் வாழ்கின்றனர். அவர்கள் தொடர்பில் இங்குள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடன் பேசி அந்த மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்' என்று அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு விடுதலையான பின்னரும் சிறப்பு முகாம் என்ற வதைமுகாமில் சாந்தனும் மற்றும் மூன்று ஈழத்தமிழர்களும் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் சாந்தன் மாத்திரமே ஈழம் திரும்பித் தனது தாயாருடன் வாழ விரும்பினார். மற்றைய மூவரும் இலங்கை திரும்பாமல் வேறு நாடுகளுக்கே செல்ல விரும்பினார். ஒரு நாட்டுக்கு திரும்பிச் செல்லலாமே தவிர, வேறு நாடுகளுக்கு செல்வதை இந்திய சட்டங்கள் அனுமதிக்கவில்லை. ஆனால், சாந்தன் தாயகம் திரும்புவதில் எந்தச் சிக்கலும் இருக்கவில்லை. அவர் தாயகம் திரும்புவதற்கு இலங்கை அனுமதி வழங்கினால் எப்போதோ வந்திருக்கலாம். ஆனால், அவர் தாயகம் திரும்புவதற்கு உதவுவதற்கு எந்த ஒரு தமிழ் தலைவரும் சிறிய முயற்சியைத்தானும் எடுத்ததாகத் தெரியவில்லை. கடைசிக் காலத்தில் அவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலை சென்ற பின்னர்தான், சிறீதரன், மனோ கணேசனுடன் ஜனாதிபதியை சந்தித்து உதவி கோரினார். சாந்தனின் தாயர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து உதவி கோரினார்.

தத்தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அரச தரப்பை அணுகுகின்ற நமது தலைவர்கள் இந்த விடயத்தைக் கண்டுகொள்ளவே இல்லை என்பது ஏனென்று தெரியவில்லை. எங்கே அணுகுவது என்பது தெரியாமல் இருந்தனரோ தெரியவில்லை.

அதிகம் ஏன், சாந்தனின் உடலம் தாயகம் வந்துசேர்ந்ததும் அதனை வைத்து அரசியல் செய்த முன்னணியினர் அது குறித்து எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால், இறுதிப் பயணத்தில் தமிழ் மக்கள் திரள வேண்டும் என்று கோரிக்கைக்கு மேல் கோரிக்கை விடுத்துக் கொண்டே இருந்தனர்.

குடும்பத்துக்கு உடுபிடவை வாங்குவதற்கும் சென்னைக்கு பயணம் செய்யும் 'அந்தத் தலைவர்', அப்படி போகின்ற போதாவது தமிழக முதலமைச்சரைப் பார்த்து சாந்தனின் விடுதலைக்காகப் பேசியிருக்கலாம்.

இவர்களிடம்தான், தமிழகத்திலுள்ள அகதிகளுக்கு உதவ இவர்கள் தமிழ்நாடு முதலமைச்சரிடம் பேசவேண்டும் என்று புகழேந்தி கோரிக்கை விடுக்கின்றார்.

**- ஊர்க்குருவி.**

## சபாநாயகர் இல்லத்துக்கு முன்பாக கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை!

கொழும்பு, மார்ச் 06

கொழும்பு - பத்தரமுல்லையில் உள்ள சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக தலங்கமை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 13 பேரையும் கடுவலை நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

கடந்த 2022 மே 4 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளில் நடந்த போராட்டத்தின்போது நாட்டின் நிலைமை குறித்து சபாநாயகருக்கு அறிவிக்கச்சென்ற 13 பேரை தலங்கமை பொலிஸார் கைது செய்தனர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட இவர்கள் பின்னர், கடுவலை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட குழுவை உருவாக்குதல் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையூறு விளைவித்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் பொலிஸார் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தனர். (ஐ)

## புதிய பாராளுமன்ற உறுப்பினராக எஸ்.சி.முத்துக்குமாரன பதவியேற்பு

கொழும்பு, மார்ச் 06

அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக சந்திரசிறி முத்துகுமாரன நேற்று சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

இதன்போது, அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக சந்திரசிறி முத்துகுமாரன நேற்று சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதேவேளை உத்திக பிரேமரட்ன பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து கடந்த 27 ஆம் திகதி விலகியதையடுத்து, அவரது பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

இதற்கு, சந்திரசிறி முத்துகுமாரனவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்ததுடன் இவர், பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட கடந்த பொதுத் தேர்தலில் 39,895 வாக்குகளை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பேருந்து கட்டணங்கள் குறைக்கப்படமாட்டாது

கொழும்பு, மார்ச் 06

எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ள போதிலும் பஸ் கட்டணங்கள் திருத்தப்படாது என்று அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

**கெமுனு விஜயரத்ன**

ஒட்டோ டீசல் விலை குறைக்கப்படாததே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், "இந்நாட்களில் ஒட்டோ டீசல்களின் தரத்தில் சிக்கல் உள்ளது. இது குறித்து சட்டப்பூர்வ பெற்றோலிய நிறுவனத்திடம் தொடர்ந்து தெரிவித்தும் தரம் குறித்து எங்களுக்கு உறுதி அளிக்கப்படவில்லை. பேருந்துகள் தற்போது நட்டத்திலேயே இயங்குகின்றன - என்றார்.

## நாடக பயிலகம் புதிய வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 06

திருமறை கலாமன்றம் நடத்தும் நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும் நாடகமும் அரங்கியலும் பாடத்தை 11, 12, 13ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும். ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறிக்கான வகுப்புகள் சனி,ஞாயிறு தினங்களில் பி.ப.3.30 மணிதொடக்கம் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத்துணைக் கலைகள் ( வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளி விதானிப்பு) நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும். இப்பயிற்சிநெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் ஆரம்ப நிகழ்வுக்கு வருகை தருவதன் மூலம் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி




வடமராட்சி, மார்ச் 06

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு பாடசாலை அதிபர் கந்தசாமி சிவனேசன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கணனிப் பொறியியலாளரும் டெக்கொறின் சொலூசன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அரியகுமார் சிறிகரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை சிறீ இராமச்சந்திரனும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கிருஷ்ண பிள்ளை பாக்கியநாதனும், முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய ஆசிரியர் வாரித்தம்பி பிரபாகரனும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சரவணமுத்து சிதம்பரநாதனும் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், வெற்றிக் கோப்பைகளும் விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்த மெய்வன்மை போட்டியில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-02)

ஈழநாடு
Eelanadu
06.03.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், மாசி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்களின் வாக்குகள்

ரணில் விக்கிரமசிங்க 'அன்னம்' சின்னத்தில் போட்டியிடவுள்ளாரெனத் தகவல்கள் வெளிவருகின்றன. அதிலும் கட்சி சாராத ஒருவராகவே அவர் போட்டியிட்டவுள்ளாரென்றும் தகவல்கள் வெளிவருகின்றன. ரணில் எவ்வாறும் வரலாம் – அது அவரின் பிரச்னை. ஆனால், அவரின் வெற்றிக்கு தமிழ் மக்களின் வாக்குகள் கட்டாயமானவை. இதேபோன்று, சஜித் பிரேமதாஸவுக்கும் தமிழ் மக்களின் வாக்குகள் கட்டாயமானவை. அந்த வகையில் அவர்கள் தமிழ் மக்களின் வாக்குகள் தங்களுக்கே கிடைக்கும் என்னும் அதீத நம்பிக்கையில் இருக்கின்றனர்.

மேற்படி இரண்டு பேருக்கும் சவாலாக அமைந்திருக்கும் – அதே வேளை, கருத்துக்கணிப்புகளில் முன்னணியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்கவும் தமிழ் கட்சிகளை நோக்கிய தனது உரையாடல்களை ஆரம்பித்திருக்கின்றார். அவரின் ஆர்வம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திப்பது வரையில் நீண்டிருக்கின்றது. கனடாவிலுள்ள அவரின் ஆதரவாளர்கள் புலம்பெயர் தமிழ் பிரதிநிதிகளை சந்திப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவை அனைத்தும் கூறும் செய்தி ஒன்றுதான் – அதாவது, அனைவருக்கும் தமிழ் மக்களின் வாக்குகள் தேவைப்படுகின்றன. அதனை தமிழ் மக்கள் எவ்வாறு வழங்கலாம் – வழங்கலாமா?

தமிழ் மக்கள் அவர்களின் வாக்குகளை கட்டாயமாகப் பிரயோகிக்க வேண்டும். ஆனால், சரியாகப் பயன்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் வாக்குகள் 'அரசியல் வாக்கு'களாக மாற வேண்டியதன் அவசியம் தொடர்பில் 'ஈழநாடு' முன்னரும் வலியுறுத்தியிருக்கின்றது. எவ்வாறு தமிழ் மக்களின் வாக்குகள் அரசியல் வாக்குகள் என்னும் தகுதியை பெறும் என்பதைப் பற்றி முன்னரும் குறிப்பிட்டிருக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்களின் வாக்குகளுக்கு மட்டும்தான் அரசியல் வாக்குகளாகும் தகுதி உண்டு. இலங்கைத் தீவின் சிங்கள மக்களின் பெரும்பான்மையான ஆதரவை பெறும் ஒருவரே ஜனாதிபதியாக வரமுடியும் என்பதை அனைவருமே அறிவர். ஆனால், சிங்கள மக்களுக்கு முன்னால் ஒரு தெரிவு மட்டும் இல்லை. அவர்களுக்கு முன்னால் இரண்டு அல்லது மூன்று தெரிவுகள் இருக்கப் போகின்றன. பல தெரிவுகள் இருக்கின்றபோது ஓர் எழுச்சியின் மத்தியில் மட்டும்தான் தனிச்சிங்கள வாக்குகளில் ஒருவர் ஜனாதிபதியாக வரமுடியும். கோட்டாபய அவ்வாறுதான் ஜனாதிபதியானார். அவ்வாறான சூழல் தற்போது இல்லை – அவ்வாறான சூழல் அண்மைக் காலத்தில் ஏற்படுவதற்கான நிலைமையும் இல்லை.

இந்த நிலையில் நோக்கினால், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்கள் வழமைபோல் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள். அவர்கள் அரசாங்கத்தில் பங்குகொள்ளும் நிலைப்பாட்டில் வாக்களிப்பவர்களேயன்றி கொள்கை நிலைப்பாட்டின் அடிப்படையில் வாக்களிப்பவர்கள் அல்லர். ஒன்றில் அவர்கள் ரணிலின் பக்கமாக நிற்பார்கள் அல்லது சஜித்தின் பக்கமாக நிற்பார்கள். அநுரகுமாரவின் பக்கமாக செல்வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவானவை. இவ்வாறானதொரு சூழலில் தமிழ் மக்களின் வாக்குகள் மட்டுத்தான் ஓர் அரசியல் நிலைப்பாட்டுக்கான வாக்குகளாக இருக்க முடியும். அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில்தான் தமிழ் மக்கள் இதுவரையில் வாக்களித்து வந்திருக்கின்றனர். ஆனால், அனைத்துத் தேர்தல்களின் பின்னரும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதே இதுவரையான வரலாறு.

இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் இம்முறை ஒரு தீர்மானத்துக்கான அல்லது பேரம் பேசலுக்கான வாக்குகளாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் முன்னைய ஏமாற்றப்பட்ட அனுபவங்களே இம்முறையும் ஏற்படும்.

## கடலட்டைப் பண்ணைகள், இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக புங்குடுதீவில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 06

வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ள கடலட்டை பண்ணை, இந்திய மீனவர்களின் அத்துமீற லுக்கு எதிராக நேற்று புங்குடு தீவில் போராட்டம் நடந்தது.

அந்த பகுதி கடற்றொழிலாளர்கள் இணைந்து முன்னெடுத்த போராட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் க.சுகாஸ் உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர். (அ)

## அநுரகுமாரவுக்கான இந்தியாவின் அழைப்பு வழமைக்கு மாறானதல்ல

### இலங்கைக்கான இந்தியத் தூதுவர்

கொழும்பு, மார்ச் 06

ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு இந்தியா சமீபத்தில் விடுத்த அழைப்பு வழமையான ஒன்று. ஒரு நாட்டின் பிரபலமான நபர்களுக்கு விடுக்கப்படும் அழைப்பு என்று தெரிவித்துள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா இந்த அழைப்பு வழமைக்கு மாறானது இல்லை - என்றும் கூறினார்.

ஏனைய நாடுகள் மற்றும் மக்களுடன் கலாசார பரிமாற்றத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்தியாவின் கலாசார உறவுகளில் ஈடுபட்டுள்ள இந்திய அரசாங்கத்தின் தன்னாட்சி அமைப்பான இந்திய உறவுகளுக்கான இந்திய பேரவையின் வருகை திட்டத்தின் கீழ் ஜே. வி. பி. தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது எனவும் அவர் சொன்னார்.

இலங்கையின் அரசியல் தலைவர் ஒருவருக்கான வழமையான அழைப்பு இது எங்களிடம் ஒரு நிகழ்ச்சி திட்டம் உள்ளது. அதன் அடிப்படையில் நாங்கள் ஏனைய நாடுகளின் வர்த்தக தலைவர்கள் அரசியல் தலைவர்கள் மதத் தலைவர்களை இந்தியாவுக்கு அழைக்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களுக்கும் இவ்வாறான அழைப்பு விடுக்கப்படும் என எதிர்பார்க்கலாமா என்ற கேள்விக்கு ஏனைய வேட்பாளர்கள் ஏற்கனவே இந்தியாவு வருகை தந்துள்ளனர். அவர் களில் யாராவது இந்தியாவுக்கு அழைக்கப் படுவார்கள் என்றால் அது அவர்களின் முதலாவது விஜயமாக அமையும்.



அவர்கள் வரவிரும்பினால் வரவேற்கப்படுவார்கள்

ஜே. வி. பி. தலைவரை இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்தித்தமை குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கையின் பெரிய அரசியல் கட்சியொன்றின் தலைவரை இந்தியாவின் சிரேஷ்ட அமைச்சர்கள் எப்போதும் வரவேற்பார்கள். இது வழமைக்கு மாறானதல்ல - என்றார். (ஐ)

## பால்புரைக்கேறி 5 நாள் சிசு பலி!

கொழும்பு, மார்ச் 06

பலாங்கொடை பிரதேசத்தில் பிறந்து 5 நாட்களேயான குழந்தை ஒன்று பால் புரையேறி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் பலாங்கொடை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மரண விசாரணைகள் இடம்பெற்று வருகிறன. (ஐ)

## காணி முகாமைத்துவ நிதியத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, மார்ச் 06


முதலீட்டு நோக்கங்களுக்காக அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகளை முறையாக விடுவிப்பதற்காக காணி முகாமைத்துவ பொறுப்பு நிதியத்தை நிறுவ அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 82 சதவீதம் அரசுக்கு சொந்தமானதாக காணப்படுவதுடன், அதன் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் என்பன வெவ்வேறு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, புதிய முதலீடுகளின்போது, முதலீட்டாளர்களுக்கு பொருத்தமாக காணியை அடையாளம் கண்டு, அவற்றை விடுவிப்பதற்கு காணி முகாமைத்துவ பொறுப்பு நிதியம் நிறுவப்படவுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 06 புதன்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 23
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ஏகாதசி




**மேடம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். உற்சாகமான நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பல வேலைகள் தடைப்பட்டு முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடிவரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்**
எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உயரும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு அதிகரிக்கும். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. முகப்பொலிவு கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். அதிகாரிகளால் அழைக்கழிக்கப் படுவீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிவரும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டும்.

**கும்பம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**மீனம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதிக்கும் நாள்.

# விடுதலை புலிகளுக்கு ஆதரவான கட்சிகளுடன் காங்கிரஸ் கூட்டணி!

## தமிழ்நாடு தலைவர் விளக்கம்

சென்னை, மார்ச் 06

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் செல்வப்பெருந்தகை விளக்கமளித்துள்ளார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் சந்தித்தபோது அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு,

கேள்வி -தி. மு. கவுடன் தொகுதி பங்கீடு பேச்சில் கசப்பு இருக்கிறதா?

பதில் - தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி இடையே கசப்பு ஒன்றும் இல்லை. இனிப்பாக, மகிழ்ச்சியாக இருக்கிறோம். பேச்சு சுமுகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஒருபோதும் தொகுதிகள் எண்ணிக்கையில் காங்கிரஸ் விட்டுக் கொடுக்காது - அவர்களும் எங்களை விடமாட்டார்கள்.

கேள்வி - விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கட்சிகளுடன் காங்கிரஸ் தேர்தலை சந்திப்பது குறித்து?

பதில் - காங்கிரஸ் 2024 தேர்தலில்தானா அவர்களுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கிறது. ஏற்கெனவே 2016, 2019, 2021 தேர்தல்களிலும் அவர்களுடன்கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்துள்ளது. தீவிரவாதத்தை காங்கிரஸ் ஒருபோதும் ஏற்காது.

கேள்வி - கட்சியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

பதில் - கட்சியை வளர்க்க வேண்டும், காமராஜர் ஆட்சியை கொண்டுவர வேண்டும் என்று 50 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கும் தொண்டர்களின் கனவுகளை எனது பதவி காலத்தில் பூர்த்தி செய்ய விரும்புகிறேன். கடந்த தேர்தலில் தி. மு. க. கூட்டணியில் எல்லா கட்சிகளும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றன. காங்கிரஸ் மட்டுமே ஒரு தொகுதியில் தோல்வியடைந்தது.

கேள்வி - தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் தனி தேர்தல் அறிக்கை வெளியிடும் திட்டம் உள்ளதா?

பதில் - தேசிய அளவில் தேர்தல் அறிக்கை வெளியிடவுள்ளனர். தமிழகத்துக்கென தனி தேர்தல் அறிக்கை வெளியிட ஆலோசித்து நடத்தி வருகிறோம் - என்றார். (ஐ)

# 16 இலட்சம் கோடி ரூபாயில் தமிழ்நாட்டுக்கு திட்டங்கள்

## அண்ணாமலை, முருகன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 06

கடந்த 10 ஆண்டுகளில் தமிழக வளர்ச்சிக்காக16 இலட்சம் கோடி (இந்திய) ரூபாய் திட்டங்களை பிரதமர் மோடி கொண்டு வந்திருக்கிறார் என்று மத்திய இணையமைச்சர் எல். முருகன், பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலை ஆகியோர் தெரிவித்தனர்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த பா. ஜ. க. பொதுக் கூட்டத்தில் பேசியபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டுமே தமிழக வளர்ச்சிக்காக ரூ.16 லட்சம் கோடியில் புதிய திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார். தமிழ் பாரம்பரியத்தையும், தமிழ் மொழியின் பெருமையையும் உலகம் முழுவதும் கொண்டு செல்லும் பிரதமர் மோடியை தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தின் சார்பாகவும் வரவேற்கிறேன் - என்றார் மத்திய அமைச்சர் முருகன்.

பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர், தன்னுடைய வாழ்க்கை முழுவதுமே மக்களின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்திருக்கும் மோடியின் குடும்பம் நாம் தான்.142 கோடி மக்களும் அவரின் குடும்பத்தினர்தான். இந்த மக்களவைத் தேர்தலில் வென்று மோடி பிரதமராக அமரும் போது தமிழகத்தில் இருந்து 39 எம்.பி.க்களை நாம் அனுப்பி வைக்க வேண்டும் -என்றார். (ஐ)

# அரசின் பணியையே நிறைவேற்றினேன்!

## அமைச்சர் தியாகராஜன்

சென்னை, மார்ச் 06

"அரசாங்கத்தை சிறப்பாக நடத்துவது சாதாரண பணி கிடையாது. அதையெல்லாம் கடந்துதான் நாங்களும், முதல்வரும் பணி செய்து வருகிறோம். இன்று (நேற்று)கூட ஒரு நாளிதழில் எனக்கும், பிரதமருக்கும் தனிப்பட்ட உறவு இருப்பது போல் செய்தி வந்துள்ளது. முதல்வர் கொடுத்த பணியைத் தான் நான் செய்தேன். அதனால் தான் மதுரைக்குச் சென்று பிரதமரை வரவேற்று வழி அனுப்பி வைத்தேன், அதில் எந்த அரசியலும் கிடையாது, அரசாங்கத்தின் பணியை நான் செய்தேன்" என அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

"பத்தாண்டுகள் மோடி அரசாங்கம் டில்லியில் உள்ளது, 10 ஆண்டுகளில் எத்தனை முறை தமிழகத்துக்கு வந்து சென்று உள்ளார், எதற்காக வந்து சென்றுள்ளார், அரசியல் செய்வதற்காக மட்டுமே பிரதமர் தமிழகத்துக்கு வருகிறாரே தவிர, தேர்தல் நெருங்கும் நேரத்தில் பலமுறை தமிழகத்துக்கு வருகிறாரே தவிர, உண்மையான மக்கள் நலன் அக்கறை இருந்தால் புயல் வந்தபோது சென்னை அல்லது தூத்துக்குடிக்கோ வந்து மக்களை சந்திக்கவில்லை. புயலின் பாதிப்பை நேரில் கண்காணிக்கவில்லை - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. கூட்டணியில் புதிய தமிழகம் கட்சி!

சென்னை, மார்ச் 06

"அ. தி. மு. க. - புதிய தமிழகம் கட்சி இடையே கூட்டணி உறுதியானது" என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க. கூட்டணி பேச்சு குழுவினர், புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமியை சந்தித்து பேச்சுவா நடத்தினர். நேற்று நடந்த இந்தப் பேச்சின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கிருஷ்ணசாமி, "அ. தி. மு. க. கூட்டணியில் புதிய தமிழகம் கட்சி இடம்பெறுவது குறித்து பேச்சு நடந்தது. பேச்சு மிகவும் சுமுகமாக இருந்தது. 2024 மக்களவை தேர்தலில் ஒரு வெற்றிக்கூட்டணியை அமைப்பதுதான் எங்களின் நோக்கம். ஒரு வலுவான கூட்டணி தமிழகத்தில் அமையும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அ. தி. மு. க. - புதிய தமிழகம் கட்சி இடையே கூட்டணி உறுதியானது." இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# ஜெயலலிதாவின் நகைகளை விற்பதற்கு இடைக்கால தடை

பெங்களூர், மார்ச் 06

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்க இடைக்காலத் தடை விதித்து கர்நாடக உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்கம், வெள்ளி, வைர நகைகள் கர்நாடக அரசின் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன.

ஜெயலலிதாவின் நகைகளை ஏலம் விடுவது குறித்த வழக்கை விசாரித்து வந்த பெங்களூர் சி. பி. ஐ. சிறப்பு நீதிமன்றம், "ஜெயலலிதாவின் நகைகளை தமிழக உள்துறை அமைச்சிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த வழக்கை தமிழகத்தில் இருந்து கர்நாடகத்துக்கு மாற்றியதற்கான செலவுத் தொகையாக ரூ. 5 கோடியை தமிழக அரசு கர்நாடகத்துக்கு வழங்க வேண்டும்" என்று தீர்ப்பு அளித்திருந்தனர்.

இந்த நிலையில், ஜெயலலிதாவின் நகைகளை ஜெயலலிதாவின் வாரிசுகள் எனக்கூறி தீபா, தீபக் தொடுத்த வழக்கையடுத்தே இடைக்கால தடை உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேசியத்துக்கும் பௌத்தத்திற்கும் முன்னுரிமை தருபவரே வேட்பாளர்

## கூறுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, மார்ச் 06

**தேசியத்துக்கும், பௌத்த மதத்துக்கும் முன்னுரிமை வழங்கும் ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**




குருநாகலில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆளும் தரப்பில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக வெளியான செய்திகள் அடிப்படையற்றவை.

பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவின் வசமே பெரும்பான்மை பலம் உள்ளது. எதிர்க்கட்சி பக்கம் செல்ல வேண்டிய தேவை எமக்கில்லை. ஜனாதிபதி தேர்தல் தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளதாக எதிர்தரப்பினர் குறிப்பிடுவது பொய்யான செய்தி.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு நாங்கள் வலியுறுத்தவில்லை. எந்த தேர்தலை நடத்தினாலும் அதனை எதிர்கொள்ள தயாராகவுள்ளோம். பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதியாக களமிறக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

தேசியத்துக்கும்,பௌத்த மதத்துக்கும் அதேபோல் ஏனைய மதங்களுக்கும் முன்னுரிமை வழங்கும் நபரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்தால் அதற்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். -என்றார். (அ)

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை கையளிப்பு

கொழும்பு, மார்ச் 06

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குமார குலரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் குறித்த சட்டமூலத்தின் சில சரத்துக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய, பரிந்துரைகளை புறக்கணித்து குழுநிலையில் நிறைவேற்றப்பட்டதாக எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தன.

எனினும், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில், உயர்நீதிமன்றத்தில் பரிந்துரைகளை புறக்கணித்து, குறித்த சட்டமூலத்தின் சில சரத்துக்களை நிறைவேற்ற ஆளும் கட்சிக்கு இடமளித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சபாநாயகருக்கு எதிராக இந்த அவநம்பிக்கை பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (அ)

# ஏ-9 வீதியில் விபத்து! ஒருவர் காயம்!!

வவுனியா, மார்ச் 06

வவுனியா, புளியங்குளம் பகுதியில் ஏ-9 வீதியில் முச்சகர வண்டியும், காரும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன் தினம் மாலை இந்த விபத்து நிகழ்ந்தது.

வவுனியா பொது வைத்தியசாலையில் பணி புரியும் வைத்தியர் ஒருவர் தனது காரில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, முன்னால் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியை மோதி விபத்துக்குள்ளானார்.

காயமடைந்த முச்சக்கர வண்டி சாரதி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ)

# மடுவில் தேக்கு மரங்களை வெட்டிச் சென்ற மர்ம நபர்கள்

## போக்குவரத்தும் பாதிப்பு

மன்னார், மார்ச் 06

மன்னார் மடுவில் வீதியோரம் இருந்த வளர்ந்த தேக்கு மரங்களை மர்ம நபர்கள் வெட்டி குற்றிகளாக ஏற்றிச்சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு மடு தேவாலயம் - மடு வீதி சந்திக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள தேக்கு மரங்களையே மர்ம நபர்கள் வெட்டி வாகனத்தில் ஏற்றி சென்றுள்ளனர் என கூறப்படுகிறது.

இவ்வாறு வெட்டப்பட்ட மரத்தின் குற்றிகளை மர்ம நபர்கள் ஏற்றி சென்ற நிலையில் கிளைகள் வீதியிலேயே கிடந்திருக்கின்றன.

இதனால் நேற்று முன் தினம் காலை குறித்த வீதியில் வாகனங்கள் பயணிக்க முடியாமல் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இதே வேளை மடு தேவாலயத்திற்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் வீதி ஓரம் வளர்ந்திருக்கும் பெறுமதியான தேக்கு மரங்கள் இவ்வாறு பல தடவைகள் மர்ம நபர்களால் வெட்டி எடுத்து செல்லப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மர்ம நபர்கள் தேக்கு மரங்களை வெட்டிய பகுதியில் இருந்து சில மீற்றர் தூரத்தில் இராணுவ முகாம் இருப்பதாகவும், சில கிலோ மீற்றர் தூரத்தில் அதாவது மடு ரோட் சந்தியில் மடு பொலிஸ் நிலையம் இருப்பதாகவும், அதற்கு அருகில் மடு ரோட் சந்தியில் இராணுவச் சோதனை சாவடி இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில்தான் வீதியோரம் இருக்கும் பெறுமதியான தேக்கு மரங்கள் நள்ளிரவில் வெட்டப்பட்டு குற்றிகளாக பல தடவைகள் ஏற்றி செல்லப்பட்டுள்ளன.

இதே வேளை மடு தேவாலயத்தை அண்மித்த பெரியபண்டிவிரிச்சான் காட்டுப் பகுதிகளிலும் மற்றும் மடு - பரப்புகடந்தான் வீதிக்கு அருகில் இருக்கும் காட்டுப் பகுதிகளிலும் பெறுமதி வாய்ந்த மரங்களான முதிரை, பாலை போன்ற மரங்கள் வெட்டப்பட்டு குற்றியாக்கி கடத்திச் செல்லப்படுகின்றன.

பெரும்பாலும் இவ்வாறு வெட்டப்படும் குற்றிகள் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இதற்கு பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. (அ)



# தாயாரால் பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட சிறுமி கட்டுநாயக்கவில் மீட்பு!

கொழும்பு, மார்ச் 06

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இத்தாலிய பிரஜை ஒருவரின் கீழ் சிறுமி ஒருவரை கடத்திச்சென்று பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சிப்பதாக தாய் அளித்த முறைப்பாட்டின் பேரில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சிறுமி கடத்தப்படவில்லை எனவும் குறித்த சிறுமி கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த இந்த தாய் வெளிநாட்டில் பணிபுரிந்து மீண்டும் நாடு திரும்பிய நிலையில் அவர் பல வருட காலமாக படல்கம பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவருடன் பழகி வந்துள்ளதாகவும் பல்வேறு வெளிநாட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இந்த தாய், சிறுமியை பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் பின்னர் அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சிறுமியின் பாதுகாவலர்கள் பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்த சிறுமி காணாமல் போயுள்ளதுடன் இத்தாலி பிரஜை ஒருவரின் கீழ் இந்த சிறுமி கடத்திச்செல்லப்பட்டதாக கூறி இந்த தாய் படல்கம பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் குறித்த சிறுமியை கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள கூலி வீடொன்றில் வைத்து மீட்டுள்ளனர். (அ)

# போதையில் 'கூகுள் மப்' காட்டிய வழியில் சென்று அலரி மாளிகைக்குள்ளே நுழைந்த இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 06

கூகுள் மப் காட்டிய பாதையில் சென்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரதமர் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகைக்குள் அத்துமீறி நுழைந்த இருவருக்கு கோட்டை நீதவான் பிணை வழங்கியுள்ளார்.

இந்த இரு நபர்களும் கடந்த சனிக்கிழமை கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மென்பொருள் பொறியியலாளர் ஒருவரும் கப்பலில் பணிபுரியும் நபர் ஒருவரும் கடந்த சனிக்கிழமை இரவு நேர களியாட்ட விடுதிக்குச் சென்றுள்ளனர்.

பின்னர் அங்கு மது அருந்திவிட்டு முகாந்திரம் வீதியில் உள்ள தங்குமிடத்திற்கு செல்ல கூகுள் மப்பை பயன்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், கூகுள் மப் காட்டிய பாதையில் சென்ற போது அவர்கள் அலரி மாளிகை வளாகத்திற்குள் நுழைந்துள்ளனர்.

இதன்போது, பிரதமரின் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் இருவரையும் கைது செய்து கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

# விமான நிறுவனத்தின் 510 மில்லியன் டொலர் கடனை அரசாங்கம் பொறுப்பேற்க தீர்மானம்

கொழும்பு, மார்ச் 06

சிறிலங்கன் விமான நிறுவனத்தின் 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை அரசாங்கத்தினூடாக பொறுப்பேற்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தை கடனுடன் விற்பனை செய்ய முடியாமையினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியால் நேற்று முன்தினம் அமைச்சரவைக்கு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)



# எமது கோரிக்கைகளை நிராகரித்துள்ளது அரசு!

## பேராயர் மல்கம் ரஞ்சித் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 06

**“உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான புதிய ஆதாரங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தாம் விடுத்த கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும்” கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் மனித உரிமை நிலவரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் வாய்மொழி மூல அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறுதாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள், வடக்கு கிழக்கில் இடம்பெற்ற அநீதிகளால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான வெளிப்படையான சுயாதீனமான பொறிமுறையின்மை குறித்து நாங்கள் தொடர்ந்தும் கரிசனை கொண்டுள்ளோம்.

இந்த மாதம் 21ம் திகதியுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஐந்து வருடங்கள் நிறைவடைகின்றது.

தாக்குதலின் பின்னர் நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் பல விசாரணைகளை முன்னெடுத்தன.

ஆனால் இந்த விசாரணைகள் உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் குறித்த அனைத்து விவரங்களையும் ஆராயவில்லை. புதிய ஆதாரங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

வெளிப்படையான சுயாதீன விசாரணைகளிற்காக நாங்கள் விடுத்த வேண்டுகோள்களையும் மன்றாட்டங்களையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது-என்றார். (அ)

# இந்தியாவிலிருந்து பண்டிகைக்கு 4 கோடி முட்டைகள் இறக்குமதி!

கொழும்பு, மார்ச் 06

சந்தையில் முட்டையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இந்தியாவில் இருந்து சுமார் 4 கோடி முட்டைகளை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முட்டை விலையை கட்டுப்படுத்துவது தொடர்பில் விவசாய அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தை இலக்கு வைத்து சந்தையில் முட்டை விலையை அதிகரிக்கும் சூழ்ச்சிகள் இடம்பெற்று வருவதாக தகவல் கிடைத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு முட்டை 55 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (அ)

# நீர் நிலையொன்றில் முதியவரின் சடலம்!

வவுனியா, மார்ச் 06

வவுனியா, ஓமந்தை பகுதியில் உள்ள நீர் நிலையொன்றில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஓமந்தை, நாவற்குளத்தில் உள்ள கல்குவாரியில் காணப்படும் நீர் நிலையிலேயே நேற்றுக் காலை சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அதே பகுதியை சேர்ந்த அருணாச்சலம் சிவராசா (வயது-68) என்ற முதியவரே சடலமாக காணப்பட்டார்.

தனித்து வாழ்ந்து வந்த இந்த முதியவர், அந்த நீர் நிலையில் குளிப்பது வழக்கம். அவரது உறவினரான இளைஞன் ஒருவர் முதியவரின் வீட்டுக்கு நேற்று முன் தினம் சென்ற போது, அவரை வீட்டில் காணவில்லை. இதையடுத்து நேற்று தேடுதல் மேற்கொண்ட போது, நீர்நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டது. (அ)

# வடக்கில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை



கொழும்பு, மார்ச் 06

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் வட மாகாண ஆளுநர் கவனம் செலுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது வடக்கில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை, மீள்குடியேற்றம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு விடுவிப்பது தொடர்பில் ஆளுநரினால் பாதுகாப்புச் செயலாளரிடம் எடுத்துக்கூறப்பட்டது.

இந்நிலையில் பாதுகாப்பு படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தாம் பரிந்துரைகளை அனுப்புவதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, வடக்கு மாகாண ஆளுநரிடம் இதன்போது உறுதியளித்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# 24 மணிநேரத்தில் விபத்துகளால் 7 பேர் பலி

கொழும்பு, மார்ச் 06

நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் நேற்றுக் காலை வரையான கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

எல்ல - ஹாலிஎல, பெரகல வீதியில் மில்லகம சந்திக்கு அருகில் திங்கட்கிழமை காலை பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்த வான் ஒன்று பாதசாரிகள் கடவையில் வீதியை கடக்க முற்பட்டபவர் மீது மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் கந்தேகும்புர ஹெல ஹல்பே பிரதேசத்தில் வசிக்கும் 89 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, நவகமுவ - கொரதொர, வதுரம்முல்ல வீதியில் விபத்தில் கடுவலை கொரதொட்ட பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். கொங்கஹஹேன பிரதேசத்தில் பாதசாரி கடவையை கடக்கும் போது கொரதொட்டையில் இருந்து வதுரமுல்ல நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியொன்று பெண் மீது மோதியுள்ளது.

அத்துடன், நேற்று முன் தினம் இரவு பெலியத்த - தங்காலை வீதியில் இடம்பெற்ற விபத்தில் சிட்டினமலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோட்டை-பஸ்தியான் மாவத்தை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தெஹிவளையில் வசிக்கும் 74 வயதுடைய முதியவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் கொழும்பு - மட்டக்களப்பு வீதிப் பகுதியில் லொறி ஒன்று முச்சக்கரவண்டியுடன் மோதியதில் முச்சக்கரவண்டி வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. முச்சக்கரவண்டியின் பின்னால் பயணித்த நபர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார். அவரின் அடையாளம் இன்னும் அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இறுதியாக, தலாவ பிரதேசத்தில் பாதெனிய - அநுராதபுரம் வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். (அ)

# சொத்துக்கள், பொறுப்புகளை வெளியிடும் சட்டத்தில் திருத்தம்!

கொழும்பு, மார்ச் 06

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் தொடர்பான சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு அமைவாக தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய நபர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்படி, இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.ஷ

இது தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுளை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் வழிகாட்டுதல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மாதிரி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதுடன் அதனை ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து (www.ciaboc.gov.lk) பதிவிறக்கம் செய்ய முடியும் என்றும் ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்குப் புதிய சட்டம்

கொழும்பு, மார்ச் 06

நாட்டின் தொல்பொருட்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்களை கண்டறிதல் மற்றும் அவற்றைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குதல் ஆகியவற்றை முறையாக முன்னெடுப்பதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித் தார்.

“பிக்கு கதிகாவத்” சட்டமூலத்தை தயாரிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடினமான சூழ்நிலையில் பராமரிக்கப்படும் புனிதத் தலங்களை பாதுகாப்பதற்கு தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குவதில் எமது அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பான ஆவணங்கள் தற்பொழுது சரிபார்க்கப்படுகின்றன.

2024 மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த புனிதத் தலங்களுக்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டை வழங்குவதே அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

இந்நாட்டின் தொல்பொருட்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்கள் கண்டறியப்பட்டு, பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு முறையான முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படுகிறது.

அதில் சேர்க்கப்பட்டுள்ள சில விடயங்கல் தொடர்பில் அடிப்படை விதிகளை தயாரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கான கருத்துக்களும் ஆலோசனைகளும் பல்வேறு தரப்பினரிடம் இருந்து பெறப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது-என்றார்.

# இலங்கை அரசின் நல்லிணக்க பொறிமுறை பாதிக்கப்பட்டோர்களுக்கு தீர்வு தரமாட்டாது

## ஐ.நா. மனித உரிமை பேரவையில் பேர்ள் சுட்டிக்காட்டு

ஜெனிவா, மார்ச் 06

**இலங்கை அரசாங்கத்தை தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பு கூறச்செய்வதன் மூலம் சர்வதேச சட்டங்களை மீறுபவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படமாட்டார்கள் என்ற செய்தியை சர்வதேச சமூகம் தெரிவிக்க முடியும் என இலங்கையில் சமத்துவம் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பு (பேர்ள்) ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கையின் பின்னர் இடம்பெற்ற பொதுவிவாதத்தில் பேர்ள் அமைப்பு இலங்கை 15 வருடங்களுக்கு முன்னர் இழைத்த யுத்த குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் இனப்படுகொலை போன்றவற்றை நினைவு கூர்ந்தது.

இந்த அநீதிகளுக்கு இது வரை நீதியோ பொறுப்புக்கூறலோ இல்லை. 169,796 தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது. அவர்கள் உயிரிழந்துவிட்டனர் என கருதப்படுகின்றது என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அர்த்தபூர்வமான பொறுப்புக்கூறல், நீதி ஆகியவற்றை முன்னெடுப்பதில் இலங்கையின் ஆட்சியாளர்கள் எந்த அரசியல் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை என தெரிவித்துள்ள பேர்ள் அமைப்பு, தற்போதைய அரசாங்கம் வெற்று நல்லிணக்க பொறிமுறைகளையே முன்வைக்கின்றது. இந்த பொறிமுறை கடந்த கால உள்நாட்டுப் பொறிமுறைகளை போல பாதிக்கப்பட்டவர்களின் கரிசனைகளை தீர்க்கப்போவதில்லை. மோதல்களின் அடிப்படைகளுக்கு தீர்வை காணப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை சிங்கள பௌத்தபேரினவாதமே தொடர்ந்தும் இலங்கையில் முக்கிய இயங்கு சக்தியாக காணப்படுகின்றது. மனித உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டங்கள் தொடர்ந்தும் உருவாக்கப்படுகின்றன எனவும் பேர்ள் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் ஒடுக்குமுறை சாதனங்களால் தமிழர்களும் முஸ்லிம்களும் தொடர்ந்தும் பாதிக்கப்படுவார்கள் என தெரிவித்துள்ள பேர்ள் அமைப்பு, கடந்தகால குற்றங்களுக்கு அப்பால் பாரிய இராணுவ மயப்படுத்தல், நினைவு கூரலை ஒடுக்குதல், தமிழர் தாயகப்பகுதிகளில் அதிகளவு சிங்களமயப்படுத்தல் போன்றவை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. (அ)



# நல்லை ஆதீனத்திடம் ஆசி பெற்ற யாழ். இந்திய துணைத் தூதுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத் தூதுவராக பதவியேற்றுள்ள செவிதி சாய் முரளி நேற்று நல்லை ஆதீன தேசிக ஞானசம்பந்த பிரமச்சாரிய சுவாமிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில், சமய ரீதியான தற்போதைய நிலைமைகள், மஹா சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சமய நிகழ்வுகள், இளைய சமுதாயத்தினால் மாறிவரும் சமய புறழ்வான பழக்கவழக்கங்கள், எதிர்காலத்தில் சமய சித்தார்த்தம் தொடர்பான விடயங்கள் தொடர்பிலும் சமயத் தலைவர்களினால் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், இந்திய தூதர அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

# வடக்கில் சுகாதாரத்துறையில் காணப்படும் ஆளணி வெற்றிடங்களுக்கு விரைவில் தீர்வு

## ஆளுநரிடம் உறுதியளித்த சுகாதார அமைச்சர்



கொழும்பு, மார்ச் 06

வடமாகாணத்தில் சுகாதார துறையினர் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் வடமாகாண ஆளுநரால் சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கொழும்பு சுவசெரிபாயவில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் சுகாதார துறைக்கான ஆளணி பற்றாக்குறை காணப்படுவதால் சுகாதாரத்துறையினர் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுனரால், சுகாதார அமைச்சருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

அதேவேளை, வடக்கில் இதுவரை நிரப்பப்படாத ஆளணி மற்றும் ஆளணி வெற்றிடங்களுக்கான மாற்றீடுகள் தொடர்பில் எதிர்வரும் சில மாதங்களுக்குள் தீர்வு பெற்றுத்தரப்படும் என வடக்கு மாகாண ஆளுநரிடம், சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்த சந்திப்பின்போது உறுதியளித்தார்.

இந்த சந்திப்பில், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பி.ஜி.மஹிபாலவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திறந்த வீஸாக்கள் ஊடாக வெளிநாடு செல்லவேண்டாம்

## வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 06

திறந்த விசா ஊடாக வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை தேடிச் செல்ல வேண்டாம். சிங்களம் பேச தெரியாத தமிழ் மொழி பேசுபவர்களே தற்போது பாதிக்கப்பட்டுள்ளார்கள். இடைத்தரகர்களின் போலியான வாக்குறுதிகளுக்கு ஏமாற வேண்டாம் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது மியன்மார் சைபர் கிரைம் பயங்கரவாத குழுவால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, ஹர்ஷ டி சில்வா கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

மியன்மார் சைபர் கிரைம் பகுதியில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் நாட்டை சேர்ந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். 56 இலங்கையர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இணையத்தளம் முறைமை ஊடாக நிதி மோசடியில் ஈடுபடுவதற்கு இவர்கள் பலவந்தமான முறையில் நிர்பந்திக்கப்படுகிறார்கள். அத்துடன் அவர்களுக்கு உளவியல் ரீதியில் தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு சென்று ஒரு தரப்பினர் அங்கு நெருக்கடிக்குள்ளான நிலையில் பிறிதொரு தரப்பினர் தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்கிறார்கள். அண்மையில் மூன்று இலங்கையர்கள் டுபாய் சென்று அங்கிருந்து பேங்கொக் சென்று தரை வழியாக தாய்லாந்து செல்ல முயற்சித்துள்ளார்கள்.

திறந்த விசா ஊடாக வெளிநாடு செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிங்கள மொழி பேச தெரியாத,தமிழ் மொழி பேசுபவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள் தான் வெளிநாட்டு தொழில் இடைத்தரகர்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே திறந்த விசா முறைமை ஊடாக வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக செல்வதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# கந்தானையில் இறைச்சிக் கடை உரிமையாளர் மீது துப்பாக்கி சூடு

கொழும்பு, மார்ச் 06

கந்தானை பிரதேசத்தில் இறைச்சி கடை உரிமையாளர் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் கந்தானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், ரி-56 ரக துப்பாக்கி, 45 தோட்டாக்கள் மற்றும் இரண்டு மகசீன்களும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# பொலிஸ் அதிகாரி துமிந்த ஜயதிலக இன்று கடமைக்குத் திரும்பாவிட்டால் பணி நீக்கம்!

கொழும்பு, மார்ச் 06

போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாள உலக நபர்களிடமிருந்து தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸிலிருந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் துமிந்த ஜயதிலக்க இன்று புதன்கிழமை பணிக்கு திரும்பவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இன்று அவர் பணிக்கு சமூகமளிக்காவிட்டால் பணி நீக்கம் செய்யப்படுவார் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இவர் வெளிநாடு சென்றிருந்தாலும் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ட்ரோலர் வலைகள் பயன்படுத்தி மீன் வளத்தை அழிக்கின்றார்கள்

## கிண்ணியா மீனவ சங்கம் தெரிவிப்பு

**அம்பாறை, மார்ச் 06**

**இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பிக்குள் நுழைந்து தடை செய்யப்பட்ட ட்ரோலர் வலைகளைப் பயன்படுத்தி மீன் வளத்தை அழிக்கின்றார்கள் என கிண்ணியா மீனவ சங்கங்களின் சமாசத் தலைவர் ரீஜால் பாய்ஸ் தெரிவித்தார்**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

**இவ்வாறு அத்துமீறி மீன்பிடிப்பதனால் இலங்கை மீனவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.**




வட மாகாணத்தில் யாழ்ப் பாணம், முல்லைத்தீவு கிளி நொச்சி முதல் கிழக்கு மாகா ணத்தில் திருகோணமலை, மட் டக்களப்பு, அம்பாறை முதலான பிரதேசங்களில் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தியா இராமேஸ்வரத்தி லிருந்து இலங்கை கடற்பரப்புக் குள் குறிப்பாக யாழ்பாணத்தில் அத்துமீறி பிடிக்கின்றார்கள்.

எமது கடலில் உள்ள அனைத்து வளங்களையும் இழுப்பு மடி வலையைப் பயன் படுத்தியும் ரோலரைப் பயன் படுத்தியும் பெறுமதி வாய்ந்த வளங்களை சுரண்டி செல்கின் றார்கள்.

குறுகிய காலத்துக்குள் இதனை அவர்கள் அபகரித்து செல்கின்றார்கள் அழிக்கின்றார் கள், இதனால் எமது மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் கள்.

இந்திய மீனவர்கள் இலங் கைக்குள் வந்து தொழில் செய் வதை உடனடியாக தடை செய்ய வேண்டும்.

அவ்வாறு வருவார்கள் ஆனால் அவர்களுக்கான தண்ட பணத்தை அரசாங்கம் அதிகமாக விதிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் எங்க ளுக்கு சலுகை தரும் என்று எண்ணி அத்துமீறல்களை கண் டும் காணாததும் போல இருக் கின்றார்கள். இந்திய மீனவர்கள் மீண்டும் மீண்டும் வந்து மீன் பிடிக்கின்றார்கள். இது எமது அனைத்து வளங்களையும் கள வாடி செல்வதாக அமைகிறது.

இன்று தொழிலில்லாமல் பலர் வெளிநாடுகளுக்கு செல் கின்றார்கள் அங்கும் தொழில் இல்லாமல் கஷ்டப்படுகின்றார் கள்.

கடல் ரீதியான அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காததனால் தான் எமது வளங்கள் அழிக்கப் படுகின்றன.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அனைத்து அதிகாரிகளும் கடலோர திணை கள் அதிகாரிகள் அனைவரும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியா மீனவர்கள் எல்லை மீறி யாழ்ப்பாணத்தில் மீன்பி டிப்பதனால் அவர்களுக்கு எதி ராக மக்கள் எடுக்காத நடவ டிக்கை இல்லை எடுக்காத போராட்டம் இல்லை

இன்று யாழ்ப்பாணத்தில் மீன் பிடிக்கின்றார்கள் நாளை கிழக்கு மாகாணத்தில் மீன்பி டிப்பார்கள். யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற அதே பிரச்சினை எமது கிழக்கு மாகாணத்தில் நடக்கும்.

மீன்பிடிக்க வருகின்றவர்கள் போதைப்பொருளைகடத்தி வருகின்றார்கள். வலையினால் மீனை அழிக்கின்றார்கள் போதைப் பொருளினால் இளை ஞர்களை அழிக்கின்றார்கள். கல்வியையும் பொருளாதாரத் தையும் அழிக்கின்றார்கள்-என் றார். (அ)

# திருக்கோணேஸ்வரர் ஆலய சிவராத்திரி நிகழ்வில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமி

## கிழக்கு ஆளுநரின் அழைப்பின்பேரில் பங்கேற்பு



திருமலை, மார்ச் 06

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற் பாட்டில் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்ற 3ஆம் நாள் சிவராத்திரி நிகழ்வில் தமிழ்நாடு மைலம் பொம்புரம் ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்துகொண்டு ஆன்மீக சொற்பொழிவை வழங் கினார்.

கிழக்கு ஆளுநரின் ஏற்பாட் டில் கடந்த முதலாம் திகதி முதல் சிவராத்திரி நிகழ்வுகள் திருக்கோணேஸ்வரம் ஆலயத் தில் தொடர்ச்சியாக தினமும் மாலை வேளையில் இடம் பெற்று வருகின்றன.

பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் 08ஆம் திகதி சிவராத்திரி தினம் வரை இந்நிகழ்வுகள் தொடர்ச்சி யாக இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தாண்டவன்வெளி விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு, மார்ச் 06

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாண்டவன் வெளிப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து பொலனறுவை நோக்கி பயணித்த சிறிய ரக லொறி ஒன்று பிரதான வீதியை கடக்க முயன்ற வயோ திபர் ஒருவர் மீது மோதியே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த முதியவர் மட்டக் களப்பு போதனா வைத்தியசா லையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்கும், எரிவாயு சிலிண்டர் வாகன மொன்றுக்கும் சேதம் ஏற்பட் டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதிக வேகம் காரணமா கவே இவ் விபத்து ஏற்பட்டுள் ளதாகவும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (அ)

# சுற்றுலாப் பயணிகளுக்காக புறாத்தீவு திறந்து வைப்பு




திருமலை, மார்ச் 06

இவ்வருடத்திற்கான பருவ கால ஆரம்பத்தை முன்னிட்டு சுற்றுலா பயணிகளின் வருகைக் காக நேற்று முன் தினம் புறாத் தீவு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம், நிலாவெளி சுற்றுலா அபிவிருத்தி குழு, திரு கோணமலை ஹோட்டல் சங்கம் மற்றும் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றின் அனுசர ணையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுற்றுலா பணி யக தவிசாளர் மதன், வனவி லங்கு ஜீவராசி திணைக்கள அதி காரிகள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். (அ)

# ஏ.ஆர்.எம்.ஜிப்ரியின் நினைவு தினம்

அம்பாறை, மார்ச் 06

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சிரேஷ்ட ஒலி-ஒளிபரப்பாளர் மர்ஹூம் ஏ.ஆர்.எம்.ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வும், 'ஏ.ஆர்.எம்.ஜிப்ரி ஒரு சகாப்தம்' எனும் நூல் அறிமுக நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கி ழமை மாளிகைக்காடு, பாபா ரோயலி வரவேற்பு மண்டபத் தில் சிறப்பாக இடம்பெற்றது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி - ஒளிபரப்பாளர் யூ.எல்.யாகூப் தலைமையில், சர்வதேச புகழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் முன்னி லையில் இடம்பெற்ற இந்நிகழ் வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிக ளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலா ளர் எம்.எம்.ஆசிக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் ஷஹிலா இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி எம்.நம்ஸீன் பக்கீர், தென்கிழக் குப் பல்கலைக்கழக பேராசிரி யர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் மற்றும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் எஸ்.கலையரசன் உட்பட முன் னாள் உள்ளூராட்சிமன்ற தவி சாளர்கள், உறுப்பினர்கள், கல் வியலாளர்கள், ஊடகவியலா ளர்கள், மர்ஹூம் ஜிப்ரியின் குடும்பத்தினர், கட்சியின் முக்கி யஸ்தர்கள் எனப் பலரும் இந்நி கழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# முதல் இடத்தை இழந்தார் மஸ்க்

## உலகின் செல்வந்தர்கள் தரவரிசையில் அமேசான் நிறுவுநர் முதலிடம்



**நியூயோர்க், மார்ச் 06**

**உலகின் முதல்தர செல்வந்தர்கள் தரவரிசையில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெஸோஸ் எலோன் மஸ்க்கிடம் இருந்து மீண்டும் முதலிடத்தை கைப்பற்றியுள்ளார்.**

**நேற்று வெளியிடப்பட்ட ப்ளூாம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின் படி இந்த தகவல்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளன.**

**ஜெஃப் பெஸோஸின் தற்போதைய சொத்து நிகர மதிப்பு 200 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.**

அதே சமயம், எலோன் மஸ்க்கின் சொத்து நிகர மதிப்பு 198 பில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டில் டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலோன் மாஸ்க் சுமார் 31 பில்லியன் டொலர்களை இழந்தார், அதே நேரத்தில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெஸோஸ் 23 பில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளதாக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2021 ஜனவரியில் எலோன் மஸ்க் 195 பில்லியன் அமெரிக்க டாலர் நிகர சொத்து மதிப்புடன் பெசோஸை வீழ்த்தி முதன் முறையாக உலகின் நம்பர் 1 செல்வந்தர் ஆனார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 2023 மே மாதம், உலகின் நம்பர் 1 செல்வந்தனர் என்ற பட்டத்தை மீண்டும் பெறுவதற்காக, ஆடம்பர பிராண்டான லூயிஸ் உய்ட்டனின் தாய் நிறுவனமான **LVMH** இன் தலைமை நிர்வாகியான பெர்னார்ட் அர்னால்ட்டை, எலோன் மாஸ்க் பதவி நீக்கம் செய்தார்.

2022 டிசம்பரில் எலோன் மாஸ்கின் டெஸ்லா மதிப்பு கடுமையாக சரிந்தபோது ஆர்னால்ட் முதன்முதலில் மஸ்க்கை முந்தினார்.

அண்மைய ப்ளூாம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின் படி, அர்னால்ட்டின் நிகர சொத்து மதிப்பு 197 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.

குறித்த தரவரிசையில் அவர் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

அதைத் தொடர்ந்து மெட்டா தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஜூக்கர்பெர்க் 179 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து மதிப்புடன் நான்காவது இடத்திலும், மைக்ரோசாப்ட் இணை நிறுவனர் பில் கேட்ஸ் 150 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்து மதிப்புடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

இதனிடையே ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி மற்றும் அதானி குழுமத்தின் தலைவர் கவுதம் அதானி ஆகியோர் முறையே 11 மற்றும் 12 ஆவது இடங்களில் உள்ளனர்.

அம்பானியின் நிகர சொத்து மதிப்பு 115 பில்லியன் டொலர்களாகவும், அதானியின் சொத்து மதிப்பு 104 பில்லியன் டொலர்களாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அமெரிக்கா-தென் கொரியா இராணுவ பயிற்சிக்கு பதிலடி

## வடகொரியா எச்சரிக்கை



*பியொங்யாங், மார்ச் 06*

தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து நடத்தும் இராணுவப் பயிற்சிகள் தமது நாட்டின் மீதான தாக்குதலுக்கான ஒத்திகை எனவும் அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் எனவும் வடகொரிய பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

தென் கொரியாவும் அமெரிக்காவும் 11 நாட்கள் நடைபெறும் இராணுவ ஒத்திகையை அண்மையில் ஆரம்பித்தன.

இந்த ஒத்திகையின் ஒரு பகுதியாக, இரு நாடுகளும் கடந்த ஆண்டை விட இரட்டை சூழ்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளன எனவும் வடகொரிய பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இது முற்றிலும் பொறுப்பற்ற இராணுவ சூழ்ச்சிகள், தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து இராணுவ பயிற்சி என்ற போர்வையில் இறையாண்மை கொண்ட வடகொரியா மீது படையெடுக்க முயல்கின்றன என வடகொரிய வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

அண்மை காலமாக வடகொரியா மற்றும் தென்கொரியா இடையில் பதற்றம் அதிகரித்து வருகிறது.

வடகொரியாவுக்கு அவ்வப்போது அணுவாயுதங்களை தாங்கிச் செல்லும் ஏவுகணைகளை பரிசோதித்து வருகிறது.

(அ)

# பிலிப்பைன்ஸில் அரிசிக்காக போராட்டத்தில் குதித்த மக்கள்!



*மணிலா, மார்ச் 06*

பிலிப்பைன்ஸில் அரிசியின் விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் பாரிய போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பிலிப்பைன்சில் சமீபகாலமாக அத்தியாவசிய பொருட்களின் விலை வரலாறு காணாத வகையில் உச்சத்தைத் தொட்டு வருகின்றது.

குறிப்பாக கடந்த டிசம்பருடன் ஒப்பிடுகையில் பணவீக்கமானது 22.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனால் அரிசியின் விலை இதுவரை இல்லாத அளவு உச்சத்தை எட்டியுள்ளது. இந்நிலைக்கு கையிருப்பில் உள்ள அரிசியை அதிகாரிகள் சட்ட விரோதமாக விற்பனை செய்ததே காரணம் என குற்றம் சாட்டப்படுகின்றது.

இதற்கிடையே அரிசியின் விலையை குறைக்க கோரி பொது மக்கள் பாரிய போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இப்போராட்டம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அரிசி விற்பனை ஊழல் தொடர்பாக தேசிய உணவு ஆணையத்தின் தலைவர், அதிகாரிகள் உட்பட 138 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுதொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக விவசாயத் துறை அமைச்சர் பிரான்சிஸ்கோ டியு லாரல் தெரிவித்துள்ளார்.

# டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக முதல் வெற்றியை பெற்ற நிக்கி!

*நியூயோர்க், மார்ச் 06*

குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான தேர்தலில் நிக்கி ஹாலே வொஷிங்டனில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

வரும் நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் குடியரசுக் கட்சி சார்பாக போட்டியிடவுள்ள வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இப்போட்டியில் டொனால்ட் ட்ரம்பிற்கும், நிக்கி ஹாலே ஆகியோருக்கு இடையில் நேரடி போட்டி நிலவி வருகின்றது. ஏற்கனவே ஜனாதிபதியாக



இருந்த டொனால்ட் ட்ரம்பிற்கு ஆதரவு அதிகமாக இருந்த போதிலும், நிக்கி ஹாலேவும் தனது பிரசாரத்தை மும்முரமாக மேற்கொண்டு வருகின்றார்.

இந்நிலையில் வோஷிங்டனில் நேற்று முன் தினம் நடந்த தேர்தலில் நிக்கி ஹாலே 63மூ வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று தனது முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

இதேவேளை தொடர்ந்து வெற்றிபெற்று வந்த டொனால்ட் ட்ரம்பிற்கு இது முதல் தோல்வியாக அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)


# பிரான்ஸ் அரசமைப்பில் கருக்கலைப்பு உரிமை!

*பாரிஸ், மார்ச் 06*

பிரான்ஸில் கருக்கலைப்பை பெண்களின் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசியலமைப்பில் கருக்கலைப்பு உரிமைகளை வெளிப்படையாகப் பதிவு செய்த முதல் நாடாக பிரானஸ் மாறியுள்ளது.

நேற்று முன் தினம் நடை



பெற்ற பாராளுமன்ற கூட்டு அமர்வில் 780 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 72 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்திருந்தமையைத் தொடர்ந்து குறித்த மசோதா வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, பிரான்ஸ் முழுவதும் பெண் உரிமை செயல்பாட்டாளர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# புதிய புரட்சி எனக் கூறிய தரப்பினரால் பயங்கரவாதமே தோற்றுவிக்கப்பட்டது!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 06

**நாட்டில் புதிய புரட்சியொன்றை செய்யப் போவதாகக் கூறிய தரப்பினரால் நாட்டில் பயங்கரவாதமே தோற்றுவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.**

மொனராகலை மாவட்டத்தில் இடம்பெற்ற பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் 119 ஆவது நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் பயங்கரவாதத்தால் இந்நாட்டில் பல உயிர்கள் பலியாகின. வடக்கை போலவே தெற்கிலும் பயங்கரவாதம் ஆட்கொண்டிருந்தது. நாட்டில் மீண்டும் இவ்வாறான அவலங்கள் உருவாக இடமளிக்கக் கூடாது.

ஒட்டுமொத்த நாடாக நாம் 90 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்பட்டுள்ளோம்.



2019 ஆம் ஆண்டு செய்த தவறை மீண்டும் செய்யாதிருப்போம். இந்த அரசாங்கம் எடுத்த முட்டாள்தனமான முடிவுகளால் நாடு நாசமடைந்தது.

மீண்டும் இவ்வாறானதொரு நாசகாரம் நடந்தால் நாட்டுக்கு என்னவாகும் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது-என்றார்.

# எதிரணியில் அமரும் திட்டம் கிடையாது!

## செய்திகளை மறுக்கிறார் நாமல்

கொழும்பு, மார்ச் 06

40 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தான் எதிரணியில் அமர திட்டமிட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களில் உண்மை இல்லை என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச தலைமையிலான மொட்டு கட்சி குழுவொன்று எதிரணிக்கு செல்லவுள்ளது எனவும், அதன்பின்னர் எதிர்க்கட்சி தலைவர் பதவியை கைப்பற்றுவதற்கு வியூகம் வகுக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணையிலேயே இந்த அரசின் இருப்பு தங்கியுள்ளது எனவும், எனவே, மக்கள் ஆணைக்கு புறம்பாக செயற்பட தயாரில்லை எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அடுத்த எந்த தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சிறிலங்கன் விமான சேவை சீரமைப்பு வேலைத்திட்டத்துக்கான காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 06

சிறிலங்கன் விமான சேவையின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்யும் ஏலத்திற்கான அழைப்பு காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று நடைபெறவிருந்த விலைமனு அழைப்பை 45 நாட்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்த விலை மனுக்கள் கோரும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு சிறப்பு தொழில்நுட்பக் குழுவும் நியமிக்கப்படவிருந்ததுடன் விலைமதிப்பீட்டு அறிக்கையை தயாரித்த பின்னர் அது தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டிருந்தார். (அ)

# இடதுசாரிகளும் வலதுசாரிகளும் நாட்டில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாது!

## நடுநிலையாளர்களின் பலம் ஓங்கியுள்ளது என்கிறார் டியூ.குணசேகர

கொழும்பு, மார்ச் 06

இடசாரி அரசியல் சக்திகள் மற்றும் வலதுசாரி அரசியல் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த தரப்பினரும் எதிர்வரும் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாது என்பதை பொறுப்புடன் கூறுவதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலில் நடுநிலையாளர்களின் பலம் தற்போது மேலோங்கி இருக்கின்றது. இவர்கள் இன்றி எந்த தரப்பினரும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாது.

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வுகாண இடதுசாரிகளிடையே ஐக்கிய தேவை.

இதனால் இடதுசாரி சக்திகள் ஒன்றாக ஒன்றிணைய வேண்டும்.

அதேவேளை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தற்போது தனது ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை விரிவுப்படுத்தியுள்ளதுடன் கட்சிக்கு புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்-என்றார்.

# அ.அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம்; சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தவேண்டாம்!

கொழும்பு, மார்ச் 06

தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுகள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் போன்றவற்றை சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துவதைத் தவிர்க்குமாறு சமூக ஊடக பாவனையாளர்களிடம் கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

உரிமையாளர்களைக் கண்டறியும் நோக்கில் தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுகள் போன்றவற்றை சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துவதன் காரணமாக குற்றச் செயல்கள் இடம்பெறலாம் என அப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

தொலைந்த பணப்பையை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நோக்கில் சிலர் பணப்பையில் உள்ள தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டுகள், அலுவலக அடையாள அட்டைகள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் போன்றவற்றை புகைப்படம் எடுத்து, பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துகின்றனர்.

ஆனால், இவ்வாறு தனிநபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துவதன் மூலம், குற்றவாளிகள் பல்வேறு குற்றங்களுக்கு அந்த தகவல்களைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திம அருமப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

# மன்னாரில் கோர விபத்து; அருட்தந்தை உயிரிழப்பு!



மன்னார், மார்ச் 06

மன்னார்-அடம்பன் பொலிஸ் பிரிவில் உள்ள அடம்பன் நாற்சந்தியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் சலேசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மரிசால் டிலான் உயிரிழந்துள்ளார்.

மன்னார் மடு தேவாலயத்தில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு தமிழ் மறை மாவட்ட குருக்களுக்கான தவக்கால தியானத்தில் கலந்து கொண்டு விட்டு திரும்பும்போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

அதன்படி மன்னார்-அடம்பன் பகுதியூடாக அருட்தந்தை டிலான் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதுண்டதில் விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் விபத்து தொடர்பான விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தல் நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்ட அமைச்சரவை?

கொழும்பு, மார்ச் 06

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய அரசியல் அமைச்சரவையொன்றை நியமித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் குறித்த அரசியல் அமைச்சரவைக் குழுவினர் கடந்த திங்கட்கிழமை இரவு கூடியுள்ளனர் எனவும், அவர்களில் அமைச்சரவையில் இடம்பெறாத ஜனாதிபதி பணிக் குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறை; வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்!

கொழும்பு, மார்ச் 06

கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களின் பற்றாக்குறை காரணமாக பல்வேறு வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் முடங்கியுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, குருநாகல் பொது வைத்தியசாலை, பதுளை பொது வைத்தியசாலை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு வைத்தியசாலைகள் கடும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம குறிப்பிட்டார்.

சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் நாட்டிலிருந்து வெளியேறுகின்றமை சடுதியாக அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

## இலங்கை - இந்திய...

உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திகளை நாம் வேகத்துடனும் சக்தியுடனும் முன்னெடுத்து வருகின்றோம். அதற்கு எமது பிரதமர் சிறந்த தலைமைத்துவத்தை வழங்குகின்றார்.

போக்குவரத்து, தொழில், 5 ஜி தொழில்நுட்பம், டிஜிற்றல் போன்றவற்றில் இந்தியா பல திட்டங்களை நகர மட்டத்திலும் கிராம மட்டத்திலும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது. இதற்கு தலைமைத்துவம் முக்கிய பங்கை வகித்தது. நீண்டகால நோக்கை முன்னிலைப்படுத்தி குறைகளை அடையாளம் கண்டு திட்டங்களை முன்னெடுத்தோம்.

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்பது மிகவும் முக்கியமானது. இதனால் இலங்கைக்கே பல்வேறு நன்மைகள் உள்ளன. எட்கா ஒப்பந்தம் இந்தியாவைவிட இலங்கைக்கே அதிக பயன் தருவதாக அமையும்.

இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியை விட இலங்கையின் உள்நாட்டு மொத்த உற்பத்தி அதிகமாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் போக்குவரத்து, உள்நாட்டில் மாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் அதிவேக வீதி, ஏனைய உட்கட்டமைப்பு, மேம்பாலங்கள், டிஜிற்றல் தொழில்நுட்பம், வலுசக்தி ஆகியவற்றில் முன்னேற்றம் காணப்படுகின்றது.

இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்கு இந்தியா உதவிகளை தொடர்ந்து வழங்கும். விவசாயம், உணவுப் பாதுகாப்பு, மீன்பிடி போன்றவற்றுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி செய்து கொண்டிருக்கும். உணவுப் பாதுகாப்புப் பிரச்னை என்பது உலகில் அனைத்து நாடுகளிலும் காணப்படுகின்ற போதிலும் அயலவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்கும்.

இலங்கையில் வாழ்வாதார பிரச்னைகளை குறைக்க முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்தில் பெரும் மாற்றங்களை செய்வது கடினமானது. என்றாலும் காங்கேசன்துறை முதல் மாத்தறை வரையிலான ரயில் போக்குவரத்துக்கு இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதாக காணப்பட்டது.

இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் நாகபட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைககள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மாத இறுதிக்குள் இந்த கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும். அத்துடன் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

## விமானப்...

ஹெலிகொப்டர்கர்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் இந்த கண்காட்சியை முற்றிலும் இலவசமாகவும் ஏனையோர் 100 ரூபாய் கட்டணம் செலுத்தி பார்வையிட முடியும் என்று விமானப் படை அறிவித்துள்ளது. (ஐ)

## மூவரின்...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "சாந்தன் 32 ஆண்டுகள் மன உறுதியுடன் சிறையில் இருந்தார். ஆனால், ஒரு வருடத்துக்குள் அவர் திருச்சி சிறப்பு முகாமில் மனநோயாளியாக மாற்றப்பட்டார். உடல் அளவிலும் செயல்பட முடியாதளவுக்கு மாறினார். சிறப்பு முகாமின் வடிவமைப்பு கொடுமையானது.

சாந்தன் இறப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் அங்கிருந்த மற்றொருவர் உயிரிழந்தார். அந்த முகாம் மூடப்பட வேண்டும். அங்கிருப்பவர்கள் உடன் வெளியிடங்களுக்கு மாற்றப்பட வேண்டும். முன்பு அது பெண்களுக்கான சிறையாக இருந்தது. இன்று அதன் பெயரை சிறப்பு முகாம் என்று மாற்றியுள்ளனர். மற்றும்படி, அது சிறைதான். இங்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

இந்நிலையில், அங்கிருக்கும் முருகன், ரொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோரை உடன் மீட்க வேண்டும். அதற்கு இலங்கையில் இருக்கக்கூடிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி எடுக்க வேண்டும். தமிழகத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளுக்கு நாங்கள் அழுத்தம் கொடுக்கின்றோம். இரு தரப்பினரும் இணைந்து செயல்பட்டு அங்கிருக்கும் மூவரையும் காப்பாற்ற வேண்டும். அதற்காக நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (ஐ)

## யார்...

எண்ணம் எனக்கு இல்லை. எந்த தேர்தல் நடந்தாலும் அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளேன். தேவையான இடங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

எமது கட்சி மக்களை ஒருபோதும் ஏமாற்றுவதில்லை. மக்கள் சொல்வதைச் செய்கிறோம். சில இடங்களில் தவறுகள் ஏற்படுகின்றன. நாம் கூறுவதை மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. சில சந்தர்ப்பங்களில் மக்கள் சொல்வதையும் நாம் ஏற்கவில்லை. அவற்றை திருத்திக் கொண்டு பயணிக்க விரும்புகிறோம்.(ஐ)

## மாலைதீவு...

இந்தியப் படைகள் இருக்காது. இந்திய இராணுவம் எந்த வகையிலும் ஆடை அணிந்து இந்த நாட்டில் வசிக்காது. இதை நான் நம்பிக்கையுடன் கூறுகிறேன்,"- என்றார்.

சீனாவுடனான ஒப்பந்தத்தின்படி மாலைதீவுகளுக்கு எந்த செலவுமின்றி இராணுவ உதவியை வழங்க சீனா உறுதியளித்துள்ளது. எனினும், ஒப்பந்தம் பற்றிய விவரங்கள் வெளியாகவில்லை.

மாலைதீவுகளில் இருந்து வெளியேறும் இந்தியா இலட்சத்தீவின் மினிகாயில் புதிய கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளது. இந்தத் தளம் இன்று புதன்கிழமை திறக்கப்படுகின்றது. இது சுயாதீன கடற்படை பிரிவாக செயல்படவுள்ளது. இந்தத் தீவு மாலைதீவிலிருந்து 130 கி. மீற்றர் தூரத்திலுள்ளது.

இந்து சமுத்திரத்தின் மூலோபாயத்தில் இலங்கையும் மாலைதீவுகளும் இந்தியாவின் முக்கிய பங்காளிகள். மாலைதீவுகள் சீனா வசமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்கம் என்பன இணைந்து இந் தப் போராட்டத்தை யாழ். மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பித்தனர்.

பின்னர், அங்கிருந்து யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூரகம் வரை பேரணியாக சென்று தூதரகத்தை முற்றுகையிட முனைந்தனர். எனினும், இடையிலேயே அவர்கள் கலகமடக்கும் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால், அங்கு பதற்றம் நிலவியது.

நிலைமை மோசமாவ தைத் தடுக்க மீனவ அமைப்புகளின் 8 பிரதி நிதிகளை துணைத் தூதர கத்துக்குள் சென்று கோரிக்கை மனுவை கையளிக்க அனுமதித்தனர்.

போராட்டத்தில், "இலங்கை மீனவர்களின் கடல் வளத்தை அழிக்காதே", "தமிழக மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்து", "எமது கடல் வளப் பாதுகாப்பை உறுதி செய்" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன், இலங்கை - இந்திய அரசுகளுக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர். (ஐ)

# சகல அரச, தனியார் ஊழியர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும்

### மத்திய வங்கி ஆளுநர்



கொழும்பு, மார்ச் 06

சகல அரச மற்றும் தனியார் சேவைத் துறைகளில் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகுமென மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் போது முக்கியமான சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார். (ஐ)

# மாணவர்களின் கல்வியில் நீதிமன்று விளையாடக்கூடாது!

### கல்வி அமைச்சர் சுசில்



கொழும்பு, மார்ச் 06

ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு வழங்கி ஒருவருடமாகும் நிலையில் இன்னும் தீர்ப்பு இல்லை. அதனால் நீதிமன்றம் இந்த நாட்டின் 43 இலட்சம் மாணவர்களுடனே விளையாடிக் கொண்டிருக்கிறது.

அதனால் இன்னும் சிறிது காலம் பொறுத்திருந்து பாராளுமன்றம் ஊடாக இதற்கு எதிராக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம் - என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், 2019ஆம் ஆண்டு பட்டதாரிகளை அபிவிருத்தி அதிகாரிகளாக இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களில் 22ஆயிரம் பேர் அவர்களின் பட்டத்துக்கமைவாக பாடங்களுக்கு நியமிக்காமல் எந்த வகைப்படுத்தலும் இல்லாமல் பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆரம்ப பிரிவுகளுக்கே இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் நான் இந்த அமைச்சை பொறுப்பேற்கும்போது இந்த 22ஆயிரம் பேருக்கும் பயிற்சியளிக்கப்பட்ட நியமனம் வழங்கி, 3 வருடத்துக்கு பின்னர் பரீட்சை நடத்தி நிரந்தர நியமனம் வழங்கவே இருந்தது.

இந்த நடவடிக்கை ஆசிரியர் சேவை யாப்புக்கமைய ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் முறைமைக்கு மாற்றமாகும். அதனால் இதனை சரி செய்யும் வகையில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, இந்த 22ஆயிரம் பேருடன் ஏனைய அபிவிருத்தி அதகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், புதிதாக ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பம் கோரி இருந்தாமே். அதன் பிரகாரம் 52ஆயிரம் விண்ணப்பங்கள் எமக்கு கிடைத்தன. அவர்களை ஆசிரியர் நியமனத்துக்காக தெரிவு செய்ய போட்டிப் பரீட்சை நடத்த நடடிக்கை எடுத்த போது, அதற்கு எதிராக சிலர், எங்களை பயிற்றப்பட்டவர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் எங்களுக்கு அதற்கான நியமனத்தை வழங்குமாறு தெரிவித்து நீதிமன்றம் சென்றனர்.

இந்த பரீட்சையை நடத்த அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்ற நிலையில் கடந்த வருடம் மார்ச் 25ஆம் திகதி பரீட்சை நடத்த இரண்டு தினங்கள் இருக்கும்போது, உயர் நீதிமன்றம் பரீட்சை நடத்த இடைக்கால தடை உத்தரவு வழங்கியது. இவ்வாறு தடை உத்தரவு வழங்கி தற்போது ஒருவருடத்தை நெருங்கி இருக்கிறது. நீதிமன்றம் செயற்படுவது பாராளுமன்றம் ஊடாக மேற்கொள்ளப்படுகிறன சட்டத்துக்கமையவாகும். உயர் நீதிமன்றத்துக்கு தேவையான நீதிபதிகளை நாங்கள் வழங்கி இருக்கிறோம். ஆனால், இந்த பரீட்சைக்கு தடை உத்தரவு வழங்கி ஒரு வருடாகியும் இன்னும் தீர்ப்பு வழங்காமல் இருக்கிறது.

இந்த வழக்கை விசாரித்துவந்த நீதிபதிகளில் ஒருவர் ஓய்வு பெற்றுச் செல்ல சில தினங்கள் இருக்கும்போது, இந்த வழக்கு தொடர்பாக தீர்ப்பொன்றை வழங்குமாறு நான் எனது சட்டத்தரணிகள் ஊடாக கோரி இருந்தேன். ஆனால் தீர்ப்பு வழங்கவில்லை. தற்போது அந்த நீதிபதி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். அதனால் மீண்டும் மனு ஒன்றை தாக்கல் செய்து, குறித்த வழக்கு தொடர்பாக கேட்கவேண்டி ஏற்பட்டுள்ளது. அதனால் உயர் நீதிமன்றம் இந்த நாட்டு 40 இலட்சம் மாணவர்களுடனே விளையாடிக்கொண்டிருக்கிறது - என்றார். (ஐ)

## பேஸ்புக்...

இன்ஸ்ட்ராகிராமில் தங்கள் கணக்குகளை நேற்றிரவு அணுகமுடியாமல பல மில்லியன் பயனர்கள் பாதிக்கப்பட்டனர். வெவ்வேறு நேரங்களில் உலகம் முழுவதும் தடைப்பட்ட பேஸ்புக் தளம் இலங்கையில் நேற்றிரவு 10.30 மணியளவில் மீண்டும் வழமைக்கு திரும்பியது.

பேஸ்புக், இன்ஸ்ட்ராகிராம், வட்ஸ் அப் சமூகவலைத்தளங்களின் தாய் நிறுவனமாக மெற்றா உள்ளது. இதில், வட்ஸ் அப் தவிர ஏனைய இரு சமூக வலைத்தளங்களும் செயலிழந்தன. இதனால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகினர்.

முடக்கத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், இந்த ஆண்டில் பேஸ்புக் இரண்டாவது தடவையாக செயலிழந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பல்கலை...

அறிவித்தனர். அவர்கள் கலைய மறுத்த நிலையில் தண்ணீர் தாரை பிரயோகம் செய்த பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளையும் வீசினர். இதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. தொடர்ந்து பொலிஸார் மாணவர்களை அடித்து கலைத்தனர். இதனால், அந்தப் பகுதியில் நேற்று மதியம் பதற்ற சூழல் நிலவியது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## சிற்றுண்டிகளின் விலை நள்ளிரவு முதல் குறைப்பு

கொழும்பு, மார்ச் 06

மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டமை காரணமாக, நேற்று நள்ளிரவு முதல் உணவுப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, ஒரு கோப்பை தேநீர் ஐந்து ரூபாயினாலும், ஒரு கோப்பை பால் தேநீர் 10 ரூபாயினாலும், சிற்றுண்டிகள் 10 ரூபாயினாலும் குறைக்கப்படவுள்ளன.

அத்துடன், சோற்றுப்பொதி ஒன்று 25 ரூபாயினாலும் கொத்து மற்றும் பிரைட் ரைஸ் ஆகியன 50 ரூபாயினாலும் குறைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## ரணிலுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே அரசியல் ஒப்பந்தம்

### ஹர்ஷன ராஜகருணா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜே.வி.பியும் இணைந்து வியாபாரம் செய்வதுடன் அவர்களுக்கிடையில் தெளிவான அரசியல் ஒப்பந்தம் காணப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பதில் எரிபொருள் விலை அதிகரிப்பு, மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு மற்றும் நீர்க் கட்டணம் அதிகரிப்பு என்பன பிரதான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அதிகரிப்புடன், நாட்டின் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் அதிகரிக்கின்றன. அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை 300 வீதத்தால் அதிகரிப்பதோடு, மிகக் குறைந்த வீதமான 20 வீதத்தினால் மின் கட்டணத்தைக் குறைத்துள்ளது.

70, 80 களில் வீடுகளுக்கு மின்சாரம் கிடைத்து மகிழ்ச்சியில் இருந்த நாட்டு மக்களை மின்கட்டணம் கட்ட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நவீன உலகத்தை நோக்கி நகர்வதற்குப் பதிலாக, நாடு மீண்டும் வண்டி யுகத்திற்குப் போய்விட்டது.

மின் கட்டணம் குறையும் என மக்கள் எதிர்பார்த்தனர். அரசு மின்கட்டணத்தை உயர்த்தும் போது, அதிக சதவீதம் அதிகரிக்கிறது. ஆனால் அதை குறைக்கும் போது மின் கட்டணம் மிகக் குறைந்த சதவீதமே குறைக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜே.வி.பியும் இணைந்து செயற்படுகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜே.வி.பியும் செயற்பட்டு வருகின்றது. ரணில் விக்கிரமசிங்கவும், ஜே.வி.பியும் மேடைகளில் அவதூறாகப் பேசப்பட்டாலும் கைகோர்த்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜே.வி.பிக்கும் இடையே தெளிவான அரசியல் ஒப்பந்தம் உள்ளது. அநுர - ரணில் ஒரு அரசியல் ஒப்பந்தம் - என்றார். (அ)

## ரயில்வே ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு இரத்து

கொழும்பு, மார்ச் 06

ரயில்வே தொழிற்சங்கத்தினர் இன்று புதன்கிழமை நள்ளிரவு முதல் முன்னெடுக்கவிருந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று புதன்கிழமை நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை பொறியியலாளர்கள் சங்கம் உட்பட பல ரயில்வே தொழிற்சங்கங்கள் கைவிட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பணிப்பகிஷ்கரிப்பின் பிரதான பிரச்னையான பதவி உயர்வு தொடர்பான பிரச்னைக்கு அமைச்சரவை தீர்வை வழங்கியதால் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதாகவும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# காணிகளை விடுவிக்கக் கோரி வடக்கில் இருந்து தபாலட்டைகள்

### ஜனாதிபதி ரணிலுக்கு அனுப்பிவைப்பு

கிளிநொச்சி, மார்ச் 06

**ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி ஜனாதிபதிக்கு நேற்று தபால் அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.**

வடக்கில் உள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த காணியை இழந்த மக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி 'நிலத்தை இழந்த மக்களின் குரல்' எனும் தலைப்பில் கவனயீர்ப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான நிறுவனம் நீண்ட காலமாக முயற்சித்து, மக்களுக்கு பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருவதுடன், குறித்த தபாலட்டை அனுப்பும் செயல்பாட்டினை ஏற்பாடு செய்திருந்தது.

இராணுவம், வனவள திணைக்களம், வனஜீவராசி, கடற்படை, தொழிற்சாலைகள், தொல்பியல் திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி இவ்வாறு தபால் அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி ஜெயபுரம் பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளை இழந்த பாதிக்கப்பட்ட 100 இற்கு மேற்பட்ட காணி உரிமையாளர்களால் காணிகளை விடுவிக்கக் கோரி இவ்வாறு ஜனாதிபதிக்கு தபால் அட்டைகள் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீண்ட கால யுத்தம் காரணமாக காணி ஆவணங்களை பெற முடியாமலும், உறுதிக் காணிகளும் இவ்வாறு மேற்குறித்த தரப்புக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதனால் குடியிருப்புக்கள், வயல் நிலங்கள் உள்ளிட்ட காணிகளை பெற்றுக்கொள்வதிலும், அபிவிருத்தி செய்வதிலும் மக்கள் நீண்ட ஆண்டுகளாக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவற்றை விடுவித்து, தமது எதிர்கால முன்னேற்றத்துக்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே குறித்த தபால் அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

தபாலட்டைகள் நிரப்பப்பட்டு ஜெயபுரம் உப தபாலகத்தில் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சாந்தனின் உயிர் பறிக்கப்பட்டமைக்கு இந்திய - இலங்கை அரசுகளே பொறுப்பு

### சபையில் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 06

'இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களின் அக்கறையின்மை காரணமாக சுதேந்திரராஜா எனப்படும் சாந்தன் என்ற நல்ல மனிதரின் உயிர் பறிக்கப்பட்டுள் ளது."

- இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளது.

சாந்தனுக்கு நேற்று பாராளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தி உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்,

'ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேக நபகராக கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சாந்தன் பின்னர் 2022ஆம் ஆண்டு திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார்.

விடுதலை செய்யப்பட்ட ஏழு பேரில் 3 பேர் இந்திய குடியுரிமை கொண்டவர்கள். இந்திய குடியுரிமை கொண்டவர்களாக இருந்தமையால் அவர்கள் இயல்பு வாழக்கையை வாழத் தொடங்கினர்.



ஆனால், இலங்கை குடியுரிமையை கொண்ட சாந்தன் உட்பட 4 பேர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் இலங்கை பிரஜைகள் என்பதை வெளிப் படுத்தப்பட வேண்டுமென இவர்களது குடும்பத்தினர் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன், வெளியுறவு அமைச்சருக்கு மூன்று முறை கடிதங்களையும் எழுதியுள்ளனர்.

ஆனால், அரசாங்கத்தின் அசமந்த போக்கு காரணமாக கடந்த ஒன்றரை வருடமாக இவரை இலங்கைக்கு அழைத்துவரும் இராஜதந்திர நகர்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் சாந்தன் உயிருடன் தாயகம் திரும்ப முடியாது போனது.

தமிழ் மக்கள் சார்பாக சாந்தனுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். இலங்கை, இந்திய அரசாங்கங்கள் நினைத் திருந்தால் சாந்தன் இலங்கை திரும்பி தமது தாய் மற்றும் சகோதரியுடன் வாழ்ந்திருக்க முடியும்.

இந்திய வெளிவிவகார அமைச்சும் தமிழர்கள் தொடர்பிலான பிரச்னைகளில் எவ்வித தீர்மானங்களையும் எடுப்பதில்லை. இலங்கை, இந்தியா என்ற இரண்டு நாடுகளும் சாந்தனின் இறப்புக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

ஏனைய மூவரையும் விரைவாக இலங்கை அழைத்து வர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# சித்திரவதைகளில் ஈடுபட்டவர் என்று உயர் நீதிமன்றம் உறுதி செய்தவரை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதா?

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 06

புதிய பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டமை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோன் சித்திரவதைகளில் ஈடுபட்டவர் என உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமித்துள்ளமை கரிசனையை ஏற்படுத்தியுள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்துள்ளதால் அவரது நியமனத்திற்கு எதிரான எதிர்ப்புகள் முடிவடையவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்தவேளை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது போல தோன்றுகின்றது இது பாரதூரமான விடயம் எனவும் அவர் கூறினார்.

இந்த நியமனத்தை மேற்கொண்ட தரப்புகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை உட்பட எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கலாம் என ஆராய்ந்து வருகின்றோம் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கடைசிபந்துவரை விறுவிறுப்பு இலங்கை அணி த்ரில் வெற்றி!



சிலேட், மார்ச் 06

கடைசிப்பந்துவரை விறுவிறுப்பை ஏற்படுத்திய போட்டியில் பங்களாதேஷ் அணியை 3 ஓட்டங்களால் த்ரில் வெற்றி கொண்டது இலங்கை அணி.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 3 இருபது -20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையிலான இருபது - 20 போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

சிலேட் நகரில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி. முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடியது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சதீர சமரவிக்ரம 61, குசல் மெண்டிஸ் 59 மற்றும் அசலங்க 44 ஓட்டங்களை குவித்தனர்.

207 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணியும் அதிரடி காட்டியது. இலக்கை வெகுவாக நெருங்கிய பங்களாதேஷ் வெற்றி பெற கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரை வீசிய சானக 8 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்தார். இதன் மூலம் இலங்கை 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் பங்களாதேஷ் 8 விக்கெட்கள் இழப்புக்கு 203 ஓட்டங்கள் எடுத்து தோல்வியை தழுவியது. பங்களாதேஷ் அணி தரப்பில் அதிகபட்சமாக ஜோக்கர் அலி 68 ஓட்டங்களும், மக்மதுல்லா 54 ஓட்டங்களும் குவித்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் மத்தியூஸ், பினுர பெர்னண்டோ மற்றும் சானக ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (ஐ)



## டோனிக்கு புதிய பொறுப்பு

சென்னை, மார்ச் 06

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் டோனி இந்தத் தொடரில் புதிய பொறுப்பு வகிக்கவுள்ளாரென அவரே தெரிவித்துள்ளார்.

ஐ. பி. எல் என்று அழைக்கப்படும் இந்தியன் பிறீமியர் லீக் 2024 தொடர் இம்மாதம் 22ஆம் திகதி தொடங்கவுள்ளது. முதல் போட்டியில் சென்னை - பெங்களூர் அணிகள் மோதவுள்ளன.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு மகேந்திர சிங் டோனி தலைவராகக் களமிறங்குவார் என்று ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், தொடங்கவிருக்கும் 2024 ஐ. பி. எல். தொடரில் புதிய பொறுப்பை ஏற்கவுள்ளதாக மகேந்திர சிங் டோனி தெரிவித்து இருக்கிறார். மேலும் புதிய பொறுப்பை ஏற்பதில் சுவாரஸ்யமாக இருக்கிறது என்றும் தெரிவித்து இருகிறார். டோனி ஏற்கவிருக்கும் புதிய பொறுப்பு என்னவென்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது. (ஐ)



## சிறந்த வீரர்கள் பட்டியலில் இலங்கையின் பதும் நிஸங்க!

டுபாய், மார்ச் 06

ஐ. சி. சியின் பெப்ரவரி மாதத்துக்கான சிறந்த வீரர்களின் தெரிவு பட்டியலில் இலங்கையின் பதும் நிஸங்க இடம்பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) ஒவ்வொரு மாதமும் சிறந்த கிரிக்கெட் வீரர், வீராங்கனையை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது.

இதன்படி, பெப்ரவரி மாதத்துக்கான 3 சிறந்த வீரர்களின் பட்டியலை அறிவித்துள்ளது.

இதில், அண்மையில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இரட்டை சதம் அடித்து அசத்திய பதும் நிஸங்க இடம்பிடித்துள்ளார். இதே போன்று அண்மைக்காலமாக தொடர்ந்து அதிரடி காட்டிவரும் இந்திய அணியின் இளம் வீரரான ஜெய்ஸ்வால், நியூசிலாந்து அணியின் முன்னணி வீரரான வில்லியம்சன் ஆகியோரும் உள்ளனர்.

இதேநேரம், சிறந்த வீராங்கனைளுக்கான பட்டியலில் அவுஸ்திரேலிய வீராங்கனை அன்னாபெல் சதர்லான்ட், ஐக்கிய அரபு இராச்சியத்தின் வீராங்கனைகளான கவிஷா எகொடகே, ஈஷா ஓசா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ)

## 100ஆவது டெஸ்டில் அஸ்வின், பெயர்ஸ்ரோ!

தர்மசாலா, மார்ச் 06

இங்கிலாந்து - இந்திய அணிகளிடையே நாளை ஆரம்பமாகும் ஐந்தாவது டெஸ்ட் போட்டி இந்திய வீரர் அஸ்வின், இங்கிலாந்தின் ஜொன்னி பெயர்ஸ்ரோ ஆகியோருக்கு 100ஆவது டெஸ்ட் போட்டியாகும்.

100ஆவது போட்டி குறித்து ஜொன்னி பெயர்ஸ்ரோ கூறுகையில்,

எனது 100ஆவது டெஸ்ட் தொப்பி என் அம்மாவுக்கானது என்று தனது அம்மா குறித்து உருக்கமாக சில விசயங்களைப் பகிர்ந்திருந்தார்.

இந்நிலையில் ரவிச்சந்திரன் அஸ்வினும் தனது 100ஆவது டெஸ்ட் குறித்து பேசியிருக்கிறார்.

“இந்த 100ஆவது டெஸ்ட் போட்டி எனக்கு மிகவும் முக்கியமானது. என்னை விட எனது பெற்றோர்கள் மற்றும் மனைவி, குழந்தைகளுக்கு மிக மிக முக்கியமானது. இப்போதும் விளையாடும் போட்டி குறித்தும் நான் அதில் எப்படி செயல்படுகிறேன் என்பது குறித்தும் என் தந்தை 40 அழைப்பு எடுத்து விடுவார். அத்தனை அழைப்புகளையும் எடுக்க வேண்டி இருக்கிறது. இது எனக்கு ஒரு பெரிய சந்தர்ப்பம். ஆனால், இதில் இலக்கைவிட பயணம்தான் சிறப்பு வாய்ந்தது” என்றார். (ஐ)









## இங்கிலாந்தின் ஜோ ரூட்

தர்மசாலா, மார்ச் 06

ரவிச்சந்திரன் அஸ்வின் மிகவும் ஆபத்தான பந்துவீச்சாளர் என இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - இந்தியா 5ஆவது டெஸ்ட் நாளை தொடங்குகிறது. முன்னதாக நடந்த 4 போட்டிகளில் 3-1 என்ற கணக்கில் வென்று தொடரையும் இந்தியா கைப்பற்றியுள்ளது.

இந்த நிலையில், ரவிச்சந்திரன் அஸ்வின் மிகவும் ஆபத்தான பந்துவீச்சாளர் என இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் தெரிவித்துள்ளார்.

மேலும், ரவிச்சந்திரன் அஸ்வின் பந்துவீச்சில் துடுப்பாட்ட வீரர்கள் நீண்ட நேரம் களத்தில் நிலைத்து ஆடுவது கடினம். அவர் எப்போதும் பேட்ஸ்மேன்களின் விக்கெட்களை நிலைத்து ஆடவிடாமல் வீழ்த்த வேண்டும் என முயற்சி செய்வார். மற்ற ஒவ் ஸ்பின்னர்களை காட்டிலும் ரவிச்சந்திரன் அஸ்வின், பந்துவீச்சில் வித்தியாசமான உத்திகளை கையாள்கிறார்.

ஓவரின் ஒவ்வொரு பந்துகளையும் அவர் வித்தியாசமாக வீசுபவர். அவர் மிகவும் ஆபத்தான பந்துவீச்சாளர். அவருக்கு எதிராக ஆடும் துடுப்பாட்ட வீரர்கள் மிகுந்த திறன் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் மட்டுமே அஸ்வினின் பந்துவீச்சு சவால்களை அவர்களால் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் - என்றார். (ஐ)

## சண்டியாகோ ரென்னிஸ்; கேட்டி போல்டர் சம்பியன்

லொஸ்ஏஞ்சலஸ், மார்ச் 05

அமெரிக்காவில் நடைபெற்ற சண்டியாகோ ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் பிரிட்டனின் கேட்டி போல்டர் சம்பியனானார்.

மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் கேட்டி, 5-7, 6-2, 6-2 என்ற செற்களில், போட்டித் தரவரிசையில் 6ஆம் இடத்திலிருந்த உக்ரைனின் மார்தா கொஸ்டியுக்கை வீழ்த்தி வாகை சூடினார். தனது ரென்னிஸ் வரலாற்றில் 2-ஆவதும் இதுவரையில் மிகப்பெரியதுமான பட்டத்தை வென்றிருக்கும் கேட்டி மகளிர் சர்வதேச தரவரிசையில் முதன்முறையாக 30 இடங்களுக்குள் முன்னேறியுள்ளார். (ஐ)



# காஸாவில் 112 பேர் பலி:

## பசிக்கு உணவு தேடி வந்த மக்கள் மீது இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிச்சூடா?

பால் புரெளன்




நிவாரணப் பொருட்கள் நிரப்பப்பட்ட டிரக்குகளைச் சுற்றி பாலத்தீனர்கள் திரண்டதால், குறைந்தது 112 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என காஸாவில் ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள சுகாதார அமைச்சகம் கூறுகிறது.

இந்த விபத்தில் 760 பேர் காயமடைந்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காஸா நகரில் வியாழக்கிழமை காலை நடந்த இந்தச் சம்பவத்தில், நிவாரணப் பொருட்கள் ஏற்றப்பட்ட லாரிகள் வந்து கொண்டிருந்த போது, நூற்றுக்கணக்கான மக்கள் லாரிகளைச் சுற்றி திரண்டனர். அப்போது அங்கு இஸ்ரேலிய ராணுவமும் இருந்தது.

இந்தச் சம்பவம் எப்படி நடந்தது, நிவாரணப் பொருட்களை சேகரிக்க வந்த மக்கள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் இறந்ததற்கு யார் காரணம் என்று பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகிறது.

பிபிசி வெரிஃபை (BBC Verify) இந்த சம்பவம் தொடர்பான முக்கிய உண்மைகளை ஆராய்ந்து, இந்த சம்பவம் எங்கு, எப்படி, எப்போது நடந்தது என்பதை அறிய முயன்றது.

பசிக்கு உணவு தேடி வந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது யார்? உண்மை என்ன?

இதற்காக பிபிசி சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட வீடியோக்கள், செயற்கைக்கோள் படங்கள் மற்றும் இஸ்ரேலிய ராணுவம் வெளியிட்ட ட்ரோன் காட்சிகளை ஆய்வு செய்து, என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை நமக்குத் தெரிந்ததை அறிய முயன்றது.

### நூற்றுக்கணக்கானோர் நிவாரணப் பொருட்களுக்காக காத்திருந்தனர்

பிப்ரவரி 28 அன்று உள்ளூர் நேரப்படி இரவு 11:30 மணிக்கு சமூக ஊடக தளமான இன்ஸ்டாகிராமில் வெளியிடப்பட்ட வீடியோவின் படி, காஸாவில் நூற்றுக்கணக்கான மக்கள் நிவாரணப் பொருட்களுக்காக காத்திருந்தனர். அந்த மக்கள் பல்வேறு இடங்களில் தீ மூட்டி அவர்களை சுற்றி ஒரு வட்டம் அமைத்து, மனிதாபிமான உதவி கேட்டு வாகனங்களுக்காக காத்திருந்தனர்.

வடக்கு காஸாவில் உள்ள மக்கள் பட்டினி அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே எச்சரித்துள்ளது. ஒரு மதிப்பீட்டின்படி, காஸாவின் இந்தப் பகுதியில் உணவு மற்றும் குடிநீரின்றி சுமார் மூன்று லட்சம் மக்கள் உள்ளனர். சமீப நாட்களாக, இப்பகுதிக்கு நிவாரணப் பொருட்கள் குறைவாகவே வந்துள்ளன.

காஸா நகரின் தென்மேற்கே அல்-ரஷித் சாலையில் ஏராளமான மக்கள் திரண்டிருப்பதை அந்த வீடியோவில் காணலாம். அந்தச் சாலை வடக்கே காசா நகரத்திலிருந்து, மத்திய தரைக்கடல் கடற்கரையை ஒட்டி, தெற்கே எகிப்தை நோக்கிச் செல்கிறது.

சமீப காலமாக, காஸாவுக்கு நிவாரணப் பொருட்களை விநியோகிக்க இந்தப் பகுதி பயன்படுத்தப்படுகிறது.

சில நாட்களுக்கு முன்பு, பிபிசி ஒரு வீடியோவை ஆய்வு செய்தது. அதில் மக்கள் அந்த பகுதியில் நிவாரணப் பொருட்களை சேகரிக்க கூடினர்.



அந்த இடத்தில் இருந்த பத்திரிகையாளர் மஹ்மூத் அவதேயா பிபிசியிடம், “ஏதாவது உணவுப் பொருட்கள் அல்லது ஒரு மூட்டை மாவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அங்கு வந்திருந்த ஏராளமானோர் திரண்டிருந்தனர்” என்றார்.

நிவாரணப் பொருட்கள் நிரப்பப்பட்ட வண்டிகள் வந்தன.

பிப்ரவரி 29, வியாழன் அன்று, உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணியளவில், எகிப்தியப் பகுதியிலிருந்து நிவாரணப் பொருட்களை ஏற்றிய வாகனங்கள் இஸ்ரேலிய ராணுவம் அமைத்த சோதனைச் சாவடியைக் கடந்தன. விசாரணைக்குப் பிறகு, அந்த வாகனத் தொகுதி அல்-ரஷித் சாலையில் மேலும் வடக்கு நோக்கி நகரத் தொடங்கியது.

இது நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற 30 டிரக்குகளின் தொகுதி என்று இஸ்ரேல் ராணுவம் கூறுகிறது. வாகனத் தொகுதியில் 18 வாகனங்கள் அல்லது சற்று குறைவாக இருந்ததாக நேரில் பார்த்த ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார்.

இஸ்ரேலிய ராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி கூறுகையில், அதிகாலை 4:45 மணியளவில் நிவாரணப் பொருட்கள் நிரப்பப்பட்ட டிரக்குகளின் தொகுதி நபுல்சி சந்திப்பை நோக்கி நகர்ந்த போது, மக்கள் வாகனங்களைச் சூழ்ந்து கொண்டனர்.

### கூட்டம் லாரிகளை சூழ்ந்து கொண்டது

அகச்சிவப்பு (Infrared) ட்ரோன் காட்சிகளை இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ளது. அந்தக் காட்சிகள் முழுமையான வரிசை அல்ல, ஆனால் நான்கு பாகங்கள் திருத்தப்பட்டு அதில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதில் இரண்டு இடங்களில் நடந்த சம்பவங்கள் காட்டப்பட்டுள்ளன. வீடியோவின் முதல் இரண்டு பகுதிகளில், நபுல்சி சந்திப்பின் தெற்குப் பகுதியில் மக்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களைச் சுற்றி வளைத்ததைக் காணலாம்.

### கான்வாயைச் சுற்றி என்ன நடந்தது?

வீடியோவின் மற்ற இரண்டு பகுதிகளில், படம் ஐநூறு மீட்டர் தொலைவில் தெற்கு நோக்கி காட்டப்பட்டுள்ளது.

இதில் நான்கு வாகனங்கள் ஒரே இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. இங்கும் வாகனங்களை சுற்றி மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. சிலர் வாகனங்களைச் சுற்றிச் செல்வதைக் காணலாம். ஆனால் பலர் செயலற்றவர்களாக தரையில் கிடப்பதையும் காணலாம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள படம் இஸ்ரேல் ராணுவம் வெளியிட்ட வீடியோ காட்சிகளில் இருந்து எடுக்கப்பட்டது. இதில், சிவப்பு வட்டத்தில் காணப்படுவது தரையில் படுத்திருப்பவர்கள்.



படத்தில், இஸ்ரேலிய ராணுவ துப்பாக்கிகளும் மக்களுக்கு அருகில் காணப்படுகின்றன.

இந்த சம்பவத்தின் முழுமையான ட்ரோன் காட்சிகளை வழங்குமாறு பிபிசி வெரிஃபை இஸ்ரேலிய இராணுவத்திடம் கோரியுள்ளது.

### துப்பாக்கிச் சூடு தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள்

அல் ஜசீரா தொலைக்காட்சியின் பிரத்யேக வீடியோ காட்சிகளை பிபிசி ஆய்வு செய்துள்ளது. இது மற்றொரு இடத்திற்கு அருகில் படமாக்கப்பட்டது. இந்த இரண்டாவது இடம் நபுல்சி சந்திப்பில் இருந்து சுமார் 500 மீட்டர் தெற்கே நிவாரணப் பொருட்கள் ஏற்றப்பட்ட டிரக்குகளுக்குப் பின்னால் உள்ளது.

இந்த வீடியோவில், துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்கிறது மற்றும் மக்கள் வாகனங்களின் மேல் ஏறுவதையோ அல்லது பின்னால் ஒளிந்து கொள்வதையோ காணலாம். சிவப்பு நிற ட்ரேசர்களையும் வானத்தில் காணலாம்.

நிவாரணப் பொருட்கள் வந்த பிறகு, இஸ்ரேலிய வாகனங்கள் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பத்திரிகையாளர் மஹ்மூத் அவதேயா பிபிசியிடம் தெரிவித்தார்.

“இஸ்ரேலியர்கள் வேண்டுமென்றே மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். மக்கள் மாவு ஏற்றப்பட்ட வாகனங்களை அடைய விரும்பினர். அவர்கள் நேரடியாக மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர், கொல்லப்பட்டவர்கள் அவர்கள் அருகே வருவதைத் தடுத்தனர்.” என்று அவர் கூறினார்.

### அதன் பிறகு என்ன நடந்தது?

இது தவிர, தோட்டாக்கள் வீசப்பட்ட பகுதி தொடர்பான மேலும் சில வீடியோ காட்சிகளையும் பிபிசி ஆய்வு செய்துள்ளது. அதில் இறந்த உடல்களை வாகனங்களில் ஏற்றி நபுல்சி சந்திப்பிலிருந்து வடக்கு நோக்கி எடுத்துச் செல்வதைக் காணலாம்.

இது தவிர, ஏராளமானோர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள அல்-அவ்தா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இடைக்கால மருத்துவமனை மேலாளர் டாக்டர். முகமது சல்ஹா பிபிசியிடம் பேசுகையில், “காயமடைந்த 176 பேர் அல்-அவ்தா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டனர். இவற்றில் 142 நோயாளிகளின் உடலில் தோட்டாக் காயங்கள் இருந்தன. இது தவிர, சில சந்தர்ப்பங்களில், நெரிசல் மற்றும் தள்ளுமுள்ளுவில் சிலரின் கை, கால்கள் உடைந்துள்ளன.” என்று கூறினார்.

### இஸ்ரேல் என்ன சொல்கிறது?

வியாழன் அன்று உள்ளூர் நேரப்படி 13:06 மணியளவில், இஸ்ரேலிய ராணுவம் அதன் அதிகாரப்பூர்வ டெலிகிராம் சேனலில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.

அதில், “இன்று காலை, நிவாரணப் பொருட்கள் நிரப்பப்பட்ட டிரக்குகள் வடக்கு காசா பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்த போது, காஸா மக்கள் லாரிகளை சுற்றி வளைத்தனர். விநியோகிப்பதற்கான பொருட்களை அவர்கள் சூறையாடினர். இந்த நேரத்தில் ஏற்பட்ட கைகலப்பு மற்றும் நெரிசல் காரணமாக, “டஜன்கணக்கான காஸா மக்கள் காயமடைந்தனர்.” என குறிப்பிட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து, 15.35 மணிக்கு (பிற்பகல் 3:35) இஸ்ரேல் இராணுவம் சமூக ஊடக தளமான எக்ஸ் தளத்தில்

(16ம் பக்கம் பார்க்க)

## “இந்திய மீனவர்களால் எங்கள் வாழ்வாதாரம் பறிபோகிறது”

# இலங்கை மீனவர்கள் கொந்தளிப்பது ஏன்?

ரஞ்சன் அருண் பிரசாத் மற்றும் பிரபுராவ் ஆனந்தன்



தமிழ்நாடு மீனவர்களுக்கு எதிராக இலங்கை மீனவர்களும், இலங்கை அரசைக் கண்டித்து தமிழ்நாடு மீனவர்களும் நடுக்கடலில் போராட்டம் நடத்தியிருக்கின்றனர். மீனவர்களுக்கு இடையே என்ன பிரச்னை?

தமிழக மீனவர்கள் தங்கள் கடற்பரப்பினுள் வருவதால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்று கூறி, அதைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இலங்கை மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை (ஞாயிறு, மார்ச் 3) நடத்தினர்.

யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்மித்துள்ள கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் இந்த போராட்டத்தை நடத்தினர். படகுகளில் கறுப்பு நிறக்கொடிகளை பறக்கவிட்டு, நடுக்கடலுக்கு சென்று இலங்கை மீனவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.



இதனால், இதை அறிந்த ராமநாதபுரம் மாவட்ட மீன்வளத்துறை அதிகாரிகள் பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஞாயிறன்று மண்டபம் மற்றும் பாம்பன் தெற்கு மீன்பிடி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் விசைப்படகுகளுக்கு மீன்பிடி அனுமதிச்சீட்டு வழங்கவில்லை.

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமநாதபுரம் மாவட்ட மீனவர்களை உடனடியாக கரை திரும்ப அறிவுறுத்தினர்.

முன்னர், கடந்த மாதம் 16-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதிவரை தமிழக மீனவர்கள் இலங்கை சிறையில் உள்ள ராமேஸ்வரம் மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி படகுகளில் கருப்பு கொடி கட்டி, உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இரண்டு நாட்டு மீனவர்களும் கடலில் போராட்டம் நடத்தும் அளவுக்கு என்ன நடக்கிறது இவ்விஷயத்தில்?

அதை அறிந்துகொள்ள, யாழ்ப்பாணம் மற்றும் ராமேஸ்வரத்தில் போராட்டம் நடத்திய மீனவர்களிடம் பேசியபோது:

### போராட்டம் எப்படி நடத்தப்பட்டது?

மார்ச் 3-ஆம் தேதி இலங்கை யாழ்ப்பாணம் கடலில் சுமார் மூன்று மணிநேரம் நடத்தப்பட்ட போராட்டத்தில் நூற்றுக்கணக்கான படகுகளில் மீனவர்கள் போராட்டம் நடத்தினர். இந்திய மீனவர்களின் வருகையை தடுத்து நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

தடை செய்யப்பட்டுள்ள இழுவை முறையிலான மீன்பிடி நடவடிக்கைகளில் இந்திய மீனவர்கள் ஈடுபடுவதனால் இலங்கையின் கடல் வளங்கள் முற்றாக அழிக்கப்பட்டுவதாக அவர்கள் குற்றம்சாட்டினர். தமது கடல் வளத்தையும் அழித்து, தமது வாழ்வாதாரத்தையும் இந்திய மீனவர்கள் அழித்து வருவதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசிக்கும் இந்திய மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி, இலங்கை கடற்படைக்கு மகஜரொன்றை கையளிக்க இலங்கை மீனவர்கள் முயற்சித்தனர்.

ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படைக்கு சொந்தமான படகை மறித்து, மகஜரை கையளிக்க முயற்சித்த போதிலும், இலங்கை கடற்படை படகு நிறுத்தாது அங்கிருந்து பயணித்தது.

இதையடுத்து, யாழ்ப்பாணம் மீனவர்கள் போராட்டத்தை கைவிட்டு, மீண்டும் கரைக்குத் திரும்பினார்கள்.

### இலங்கை மீனவர்கள் சொல்வது என்ன?

போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீனவர் அருள்தாஸ், “இந்திய மீனவர்களின் வருகையால் எங்கள் மக்கள் படகை இழந்திருக்கிறார்கள். தொழில் செய்ய முடியவில்லை,” என்கிறார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை காரணமாக, தமது சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்படுவதாக யாழ்ப்பாணத்து மீனவர்கள் கூறுகின்றனர்.

“நேற்று 8 வலைகள் இல்லாமல் போயின. மூன்று பேரின் வலைகளை அறுத்து விட்டார்கள். எப்படித் தொழில் செய்வது. இன்றைக்கு தொழிலுக்கு போகாத காரணம் இது தான். இப்படி தொழில் செய்து என்ன பிரயோசனம்? ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் இல்லாமல் போயின. அப்படியே எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்,” என ஒரு மீனவர் குறிப்பிட்டார்.

“ஒருமுறை வல்வெட்டித்துறை கடலுக்கு வந்து இந்திய மீனவர்கள் எங்கள் வலைகளை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். எங்கள் அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. டிராலர் வலைகளை நிறுத்தினால்தான், இலங்கை மீனவர்கள் வாழ முடியும்,” என மற்றுமொரு மீனவர் கூறினார்.

இந்திய மீனவர்கள் தங்கள் கடற்பரப்பில் புகுந்து டிராலர் வலைகளைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஆவன செய்யவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கூறினர்.



### இலங்கை அமைச்சரின் பதில் என்ன?

இலங்கை மீனவர்கள், இலங்கை அரசாங்கம் மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டு குறித்து, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினவியபோது:

“அரசாங்கத்தை பொருத்தவரையில் கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில் நாங்கள் எங்களால் முடிந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு தான் இருக்கின்றோம்,” என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பதிலளித்தார்.

### தமிழக மீனவர்கள் கூறுவது என்ன?

இலங்கை மீனவர்கள் நடத்திய இந்தப் போராட்டம் குறித்து ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கப் பிரதிநிதி எமரிட் பேசுகையில், கடந்த வாரம் இலங்கை சிறையில் உள்ள ராமேஸ்வரம் மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி படகுகளில் கருப்பு கொடி கட்டி, உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதாகக் கூறினார்.

“ராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை, இந்திய அரசை கண்டித்து மட்டும் போராட்டம் நடத்தினரே தவிர இலங்கை மீனவர்களுக்கு எதிராக இதுவரை தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்தியதில்லை. ஆனால் இன்று தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை மீனவர்கள் கருப்பு கொடியுடன் கடலில் போராட்டம் நடத்தியது தமிழக மீனவர்களுக்கு வருத்தம் அளிக்கிறது,” என்றார்.

மேலும் பேசிய அவர், இரு நாட்டு அரசுகளும் உடனடியாக மீனவர் பிரச்சனையில் கவனம் செலுத்தி மீனவர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்பதே தமிழக மீனவர்களின் பிரதான கோரிக்கையாக உள்ளதாகக் கூறினார்.

“இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்னையை தீர்வு கிடைப்பதற்கு பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள இந்திய இலங்கை மீனவர் பேச்சுவார்த்தையை உடனடியாக நடத்த வேண்டும். இரு நாட்டு மீனவர் பேச்சுவார்த்தையில் மட்டுமே நிரந்தர தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.”

“இரு நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. எனவே இரு நாட்டு அரசும் மீனவர் பிரச்னைக்கு கவனம் செலுத்தி மீனவர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் மீனவர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு கிடைக்க தமிழக மீனவர்கள் எதையும் விட்டுக் கொடுத்து போவதற்கு தயாராக உள்ளோம்,” என்றார்.

இலங்கை மீனவர்களுடன் மோதல் போக்கு தொடர்வதை தமிழக மீனவர்கள் விரும்பவில்லை. வரையறுக்கப்பட்ட மீன்பிடி தொழில் செய்வதற்கு இரு நாட்டு அரசும் உதவி செய்ய வேண்டும் என்பது தமிழக மீனவர்கள் கோரிக்கை என்றார் மீனவ சங்க பிரதிநிதி எமரிட்.

### ‘தமிழக மீனவர்கள் எதையும் விட்டுக்கொடுக்கத் தயார்’

இலங்கை மீனவர்களின் கருப்புக்கொடி போராட்டம் குறித்து இலங்கை இந்திய பேச்சுவார்த்தை குழு தலைவர் ஜேசுராஜா பேசுகையில், கடந்த சில மாதங்களாக இரு நாட்டு மீனவர்கள் இடையே பிரச்னை பெரிதாகி வருகிறது, என்றார்.

“இது தொடர்பாகவும், இலங்கை சிறையில் உள்ள ராமேஸ்வரம் மீனவர்கள் ஐந்து பேரை விடுதலை செய்ய வலியுறுத்தி இந்திய மீன்வளத்துறை அமைச்சர் ரூபாலா மற்றும் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இருவரையும் ராமேஸ்வரம் மீனவர்கள் டெல்லியில் சந்தித்து கோரிக்கை மனு அளித்துள்ளோம். இருவரும் விரைவில் இரு நாட்டு மீனவ பேச்சுவார்த்தை நடைபெற நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ள நிலையில் இன்று தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை மீனவர்கள் கடலில் கருப்பு கொடி கட்டி முற்றுகை போராட்டம் நடத்தியுள்ளனர், இது வேதனையளிக்கிறது,” என்றார்.



“மீனவர்களின் வாழ்வாதாரத்திற்காக இலங்கையில் மீனவர்கள் போராடுகிறார்கள். அதை தமிழக மீனவர்கள் ஏற்று கொள்ள கூடிய ஒன்று தான். அதே நேரத்தில் வயிற்றுப் பிழைப்புக்காக மீன்பிடிக்க சென்று இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு இலங்கை அடைக்கபட்ட மீனவர்களுக்காக இலங்கை அரசை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்தினோம்.


“ராமேஸ்வரம் மீனவர்கள் படகுகளில் கருப்பு கொடி கட்டி போராட்டம் நடத்தியதால் இன்று இலங்கை மீனவர்கள் கருப்பு கொடி கட்டி இந்திய மீனவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்துவது எந்த வகையிலும் நியாயம் இல்லை,” என்றார்.

மேலும் பேசிய அவர், இரு நாட்டு மீனவர்களும் ஒருவருக்கொருவர் ஆர்ப்பாட்டம் செய்வதால் எந்த பயனும் இல்லை. மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுமே தவிர பிரச்சனைக்கு தீர்வு ஏற்படாது, என்றார்.

“இலங்கை மீனவர்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழக மீனவர்கள் மீன்பிடி முறையில் மாற்று திட்டம் கொண்டு வர பல்வேறு யோசனைகளை செய்து வருகிறோம். தமிழக மீனவர்கள் இழுவை மடி படகை மாற்றி மீன்பிடிக்க அரசுடன் ஆலோசனை செய்து மாற்றுத் திட்டத்திற்கு காத்திருக்கின்றோம்.”

“போராட்டம் தொடர்ந்தால் கடலில் இரு நாட்டு மீனவர்கள் இடையே மோதல் ஏற்படும் சூழல் ஏற்படும். இரு நாட்டு மீனவர் பேச்சு வார்த்தையை மீண்டும் நடத்தி மீனவப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கிடைக்க அரசாங்கங்கள் முயற்சி செய்ய வேண்டும்,” என இலங்கை இந்திய மீனவர் பேச்சுவார்த்தை குழு தலைவர் ஜேசுராஜா தெரிவித்தார்.

# காஸாவில் 112 பேர் பலி:...



(14ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு அறிக்கையை வெளியிட்டது. அதில் ராணுவம் முன்பு கூறிய தகவலை மீண்டும் வலியுறுத்தியது.

இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல் பீட்டர் லெர்னர் இங்கிலாந்தின் சேனல் 4 செய்தி நிறுவனத்திடம் இது தொடர்பாகப் பேசினார். அப்போது அவர் கூறுகையில், வாகனங்கள் அருகே திரண்டதால், கான்வாய் முன்னோக்கி செல்ல முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் அலைமோதியது.

“பாதுகாவலர்களை அழைத்துச் செல்வதற்காக அங்கு நிறுத்தப்பட்டிருந்த இஸ்ரேலிய ராணுவ டாங்கிகள், மக்கள் மத்தியில் பீதி இருப்பதைக் கண்டனர். கூட்டத்தை கலைக்க அவர்கள் சில எச்சரிக்கை குண்டுகளை வீசினர்.” என்று கூறினார்.

இதற்குப் பிறகு, இஸ்ரேலிய ராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரியின் வீடியோ அறிக்கை ராணுவத்தின் சமூக ஊடக தளமான எக்ஸ் பக்கத்தில், பிற்பகல் 22.35 மணிக்கு (இரவு 10.35)



வெளியிடப்பட்டது. அதில் அவர், “நூற்றுக்கணக்கானவர்களின் எண்ணிக்கை விரைவில் ஆயிரங்களாக மாறியது மற்றும் நிலைமை கட்டுப்பாட்டை மீறியது” என்று கூறினார்.

பொதுமக்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்துவதை தவிர்க்கும் வகையில், டாங்கி கமாண்டர் பின்வாங்க முடிவு செய்ததாக அவர் கூறினார். ‘இராணுவம் எச்சரிக்கையுடன் பின்வாங்கத் தொடங்கியது; அவர்கள் கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை” என்று அவர் கூறினார்.

முன்னதாக, மாலை 6 மணி முதல் 7 மணி வரை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் சிறப்பு ஆலோசகர் மார்க் ரெகேவ் சிஎன்என்- க்கு பேட்டி அளித்திருந்தார்.

இஸ்ரேல் எந்த வகையிலும் நேரடியாக ஈடுபடவில்லை என்று அவர் கூறினார்.

மற்ற சந்தர்ப்பங்களில் இஸ்ரேலிய ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் ஆனால் அவை நிவாரணப் பொருட்களுடன் தொடர்புடையவை அல்ல என்றும் அவர் கூறினார். இருப்பினும், அவர் தனது கூற்றை நிரூபிக்க எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை.

மார்க் ரெகெவ் கூறுகையில், “டிரக்கை சுற்றி வளைத்த கும்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது, ஆனால் அவை பாலஸ்தீன ஆயுதக் குழுக்களால் சுடப்பட்டன. அது ஹமாஸ் அல்லது வேறு ஏதேனும் குழுவா என்பது எங்களுக்குத் தெரியாது” என்றார்.

**என்ன சொல்கிறது ஹமாஸ்?**

இஸ்ரேலிய ராணுவத்தின் அந்த அறிக்கையை ஹமாஸ் நிராகரித்துள்ளது. பொதுமக்கள் மீது நேரடியாக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான வலுவான ஆதாரங்கள் உள்ளன என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

போர் நிறுத்தம் மற்றும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக கத்தாரில் நடைபெற்று வரும் விவாதங்கள் ஆபத்தாக இருக்கக்கூடும் என ஹமாஸ் எச்சரித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள தலைவர்கள் இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, சம்பவம் எப்படி நடந்தது, என்ன நடந்தது என்பதை கண்டறிய விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னதாக செவ்வாயன்று, காஸா பகுதியில் 5 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் உணவுப் பொருட்களுக்கு கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்வதாக ஐக்கிய நாடுகள் சபையின் மூத்த அதிகாரி ஒருவர் எச்சரித்திருந்தார். இதற்குப் பிறகு, காஸாவில் மனிதாபிமான நிலைமை குறித்து கவலைகள் எழுப்பப்பட்டன.

